# பத்திரிகை சம்பந்தமாக 3 அமைச்சர்கள் குழு ஆராயும்!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★





# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 154
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 31 ஜமா. அவ் 10 புதன்கிழமை [15-7-70]





## மந்திரிசபையின் உபகுழு நியமனம்

**கோட்டை, செவ்வாய்**

**பத்திரிகை சம்பந்தமான அரசாங்கத்தின் கொள்கையை செயற்படுத்துவதற்கு மந்திரிசபை உப குழுவொன்று இன்று நியமிக்கப்பட்டது. 3 அமைச்சர்களைக் கொண்ட இந்தக் குழு பத்திரிகைச் சபை அமைப்பது சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கும்.**

தகவல், ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா, வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன ஆகியோரே உபகுழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

கூட்டு முன்னணியினரின் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெற்ற பத்திரிகை சம்பந்தமான நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டது. பத்திரிகைச் சபை அமைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்தக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

# கள்ளக் கடத்தலைத் தடுக்க புதிய வழிகள்; கடலில்தான் ரோந்து!

## 10 தினங்களாக பாடசாலை மூடப்பட்டுள்ளது

### அங்குள்ள ஒரே ஆசிரியருக்கு சுகவீனமாம்

பச்சிலைப்பள்ளி, செவ். கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பாடசாலையொன்று கடந்த பத்துத்தினங்களாக மூடப்பட்டுக்கிடக்கிறது. இதனால் சுமார் எண்பதுக்கு மேலான பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப்பாடசாலையே இவ்விதம் மூடப்பட்டுள்ள பாடசாலையாகும்

மேற்படி பாடசாலையில் எண்பதுக்குமேலான பிள்ளைகள் கல்விகற்கின்ற போதும் அவர்களுக்கு ஒரேயொரு ஆசிரியரே கல்விபோதித்து வரவேண்டிய அவல நிலை இருக்கிறதெனவும், அந்த ஆசிரியர் சுகவீனம் காரணமாகப் பாடசாலைக்கு வராமலிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மூடப்பட்டுள்ளது சம்பந்தமாக கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினருக்கு பெற்றோர்கள் அறிவித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளனர்.

## 'சிம்மாசனப் பிரசங்கத்தை த. கா. அங்கீகரிக்கக் காரணம்

## வடக்கில் தளபதிகளின் மாநாட்டில் யோசனை

### கள்ளக்குடியேற்றம் குறைந்துள்ளதாம்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியில் கள்ளக் கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதற்கு புதிய வழிமுறைகளைக் கையாள வேண்டியது அவசியமென்பதை இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகளும் பொலிஸ் அதிபரும் ஒப்புக்கொண்டு இதற்கான சில வழிமுறைகளையும் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

வடபகுதிக்கு நேற்று விஜயம் செய்த முப்படைத் தளபதிகள், பொலிஸ் அதிபர், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமை[illegible]

வடபகுதியிலுள்ள இராணுவ, கடற்படை, பொலிஸ் அதிபர்களும் கலந்து கொண்ட மகாநாடு ஒன்று பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜயக்கொடி தலைமையில் பலாலி இராணுவ முகாமில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

வடக்கில் சட்டவிரோதக் குடியேற்றம் சென்ற பத்து ஆண்டுகளில் வெகுவாகக் குறைந்திருப்பதாகவும், ஆ[illegible] கள்ளக்கடத்தல் அதிகரித்து வந்திருப்பதாகவும் மாநாட்டில் கருத்து வெளியிடப்[illegible]

கள்ளக் [illegible] பதற்குக் கூடியளவு கடற்படை[illegible]யே பயன்படுத்தப்பட்டதாம்.

கண்காணிப்பு நிலையங்கள் சிலவற்றைப் புதிதாகத் திறக்கவேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

மிக வேகமான இயந்திரப் படகுகள் தேவையென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் கள்ளக் கடத்தலையும், சட்ட விரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதற்குக் கரையோரங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதைவிடக் கடலில் தான் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டதாம்.

இந்த யோசனைக[illegible]

அரசியல் நிர்ணயசபை

## யூ. என். பி முடிவு 16-ந் திகதி தெரியும்

கோட்டை, செவ்.

அரசியல் நிர்ணயசபை பற்றி ஆராய்வதற்குக் கூடிய ஐ. தே. கட்சியின் ஆட்சிமன்றக் குழு சட்ட நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவதென முடிவு செய்தது. ஆட்சிமன்ற உறுப்பினர் அறையில் இரண்டு மணிநேரமாக இக் கூட்டம் நடந்ததாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன கூறினார்

'இது விஷயமாக நாங்கள் சட்ட ஆலோசனை கோரியுள்ளோம். இதற்காக இன்னுமொருமுறை இம் மாதம் 16-ம் திகதி கூடுவோம்' என அவர் மேலும் கூறினார்

## 'இவர்களை வேலைக்கு

## பல்கலைக்கழகத்தில் சோஷலிச நூல்நிலையம்

கொழும்பு, செவ்வாய் சோஷலிச நூல்நிலையம் ஒன்று வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உதவிக் கல்வியமைச்சர் திரு. துடாவை நூல்நிலையத்தை இன்று திறந்துவைத்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இதுபோன்ற நூல்நிலையம் இங்குதான் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசியலில் சோஷலிச இலக்கியம், பொருளாதாரம் போன்ற புத்தகங்கள் இந்த நூல்நிலையத்தில் இருக்கும். பல்கலைக்கழக மாணவர் இயக்கத்தினால் இந்த சோஷலிச நூல்நிலையம் நடாத்தப்பட்டுவரும்.

(சி பி ஏ)

## 16,000 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு. செவ்வாய் இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி இவ்வருடம் ஜூன் மாதம் 13ந் திகதி வரை 72,000 பேர் இந்திய வம்சாவளியினராகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 16,000 பேர் பாரதம் திரும்பியுள்ளனர்.

(சி பி ஏ)

## சமூககுறைபாடு குழு நியமனம்

கோட்டை, செவ்.

சமூக குறைபாடுகள் சட்டம் பற்றி ஆராய மந்திரிசபை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன, விஞ்ஞான அமைச்சர் திரு. பி. பி. சுபசிங்கா ஆகியோர் இதுபற்றிய ஆலோசனைகளை அரசாங்கத்துக்கு வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பாடசாலையில் எண்பதுக்குமேலான பிள்ளைகள் கல்விகற்கின்ற போதும் அறிவித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளனர்.

...துள்ளதாகத் தெரிகிறது.

வடபகுதிக்கு நேற்று விஜயம் செய்த முப்படைத் தளபதிகள், பொலிஸ் அதிபர், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் ஆகியோர் வல்வெட்டித்துறை, பலாலி, மாதகல் ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்று அங்குள்ள பொறுப்பதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்தனர்.

... கள்ளக்கடத்தல் அதிகரித்து வந்திருப்பதாகவும் மகாநாட்டில் கருத்து வெளியிடப்பட்டது.

கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்குக் கூடியளவு கடற்படையையே பயன்படுத்த வேண்டுமென்றும், கடற்படை, இராணுவம், பொலிஸ்படை ஆகியவை கூட்டாக இந்தத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்றும் மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்...

... ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதைவிடக் கடலில் தான் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டதாம்.

இந்த யோசனைகளைக் கொண்டு கொழும்பு சென்றதும் தீர்க்கமான முடிவு செய்யப்படுமென்று உதவி அமைச்சர் தெரிவித்துச் சென்றுள்ளதாக அறியப்படுகிறது.

...மொருமுறை இம்மாதம் 16-ம் திகதி கூடுவோம்' என அவர் மேலும் கூறினார்

... இதில் 16,000 பேர் பாரதம் திரும்பியுள்ளனர்.

(சி பி ஏ)

...யக்கா, போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன, விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா ஆகியோர் இதுபற்றிய ஆலோசனைகளை அரசாங்கத்துக்கு வழங்குவர்.

## 'சிம்மாசனப் பிரசங்கத்தை த. கா. அங்கீகரிக்கக் காரணம் பரஸ்பரநம்பிக்கைதான்'

யாழ்ப்பாணம், புதன்

'அதிபெரும் பான்மைப் பலத்துடன் ஆட்சிப்பொறுப் பேற்றிருக்கும் ஐக்கிய முன்னணிஅரசாங்கம் இப்போது இருக்கும் சூழ்நிலையில் என்ன செய்யப்போகிறது என்று ஒன்றும் தெரியாது நாம் மூவர் மட்டும் ஆட்சி மன்றத்தில் இருந்தாலும் கூட நாம் அவர்கள் மேல் வைத்த நம்பிக்கையினால் அவர்களும் எம்மில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் இதனால் தான் நாம் சிம்மாசனப் பிரசங்கத்திற்குத் திருத்தப் பிரேரணை எதுவும் கொண்டுவரவில்லை' என்று நல்லூர் எம். பி. திரு. அருளம்பலம் அரியாலை திருமகள் மன்ற இரண்டாவது ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து பேசும் போது கூறிப்பிட்டார்.

திருமகள் மன்றத்தலைவர் செ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில், இந்நாட்டில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் தான் எனது முழு அக்கறையையும் எடுத்துள்ளேன். தமிழ் மக்கள் இலங்கையில் எங்கு வாழ்ந்தாலும் அவர்களது தாய் மொழியான தமிழில் அரசாங்கத்துடனும் நீதிமன்றங்களுடனும் தொடர்பு கொள்ள தமிழ் மக்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும்

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி அருளம்பலம் பரிசில்கள் வழங்கினார்.

## முகாம்களையும் சென்று பார்த்தனர்

யாழ்ப்பாணம், புதன்

சட்ட விரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவைபற்றி வடபகுதியிலுள்ள நிலைமைகளை நேரில் ஆராயும் பொருட்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்டான்லி சேனநாயகா, இராணுவத் தளபதி திரு சேபாலஆட்டிகல, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஏ. ஆர். இரத்தினவேல், பாதுகாப்பு வெளிவிவகார உதவிஅமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி ஆகியோர் நேற்று காலை விசேஷ விமானத்தில் பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கிய போது அவர்களை யாழ். மாவட்டதில் அரசாங்க அதிபர் திரு ஜே. எம். சபாரத்தினம், வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், நியமன எம். பி. திரு. எம். ஸி. சுப்பிரமணியம், மைலிட்டி கி. ச. தலைவர் திரு கே. ரி. இராதுரை ஆகியோர் வரவேற்றனர்.

இராணுவ பொலிஸ் அதிபர்களுடன் கடற்படைத் தளபதி விக்டர் ஹன்டர், விமானப்படைத் தளபதி ரேகன் அமரசேகரா ஆகியோரும் டாக்டர் ரத்வத்தையும் வந்திருந்தனர்.

இவர்களின் வருகையை யொட்டி பலாலி விமான நிலையம் நீலம், சிவப்பு நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வல்வெட்டித்துறை, பலாலி இராணுவ முகாம்களையும் இவர்கள் போய்ப்பார்த்தனர்.

(மல்லாகம் நிருபர்)

## 'இவர்களை வேலைக்கு அமர்த்தாதீர்'

### தனியார்நெசவுசாலைகளுக்கு அரசாங்கம் சுற்றறிக்கை

வேலணை, செவ்வாய்

அரசாங்க நெசவு நிலையங்களிலும் கூட்டுறவு நெசவு நிலையங்களிலும் பயிற்சி பெற்றவர்களைத் தனியார் தொழில் ஸ்தாபனங்கள் வேலைக்கு அமர்த்தக்கூடாது. அப்படி அமர்த்தும்பட்சத்தில் அரசாங்க உதவிகள் பெறும் தனியார் ஸ்தாபனங்கள் அவ்வுதவிகளை இழக்க வேண்டியேற்படும்.

இவ்வாறு கூறும் சுற்றறிக்கை ஒன்றை யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள சகல தனியார் நெசவுநிலைய உரிமையாளர்களுக்கும் கிராம முன்னேற்ற சிறுகைத்தொழில் பகுதி யாழ்ப்பாணக்கிளை அனுப்பிவைத்துள்ளது.

அரசாங்க மற்றும் கூட்டுறவு நெசவு நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களை தனியார் ஸ்தாபனங்கள் வேலைக்கு அமர்த்தக்கூடாதென்றும், 69ம் ஆண்டு ஜூலை 1ம் திகதிக்குப்பின் இவ்விதப் பயிற்சிபெற்றவர்களைத் தனியார் ஸ்தாபனங்கள் வேலைக்கு அமர்த்தியிருந்தால் அவர்களை 70-ம் ஆண்டு ஜூலை 31-ம் திகதிக்குமுன் வேலையினின்றும் நீக்கிவிட வேண்டுமென்றும், தனியார் ஸ்தாபனங்கள் தமக்குத் தேவையான ஊழியர்களைத் தாமே பயிற்றுவித்துக் கொள்ள வேண்டுமென்றும் பிரஸ்தாப சுற்றறிக்கைதெரிவித்துள்ளது.

சுற்றறிக்கையின் கோரிக்கையைமீறும் தனியார் நெசவு நிலையங்கள் அரசாங்கத்திடமிருந்துபெறும் சலுகைகளை இழக்கவேண்டியேற்படுமென்றும் சுற்றறிக்கைகூறுகிறது.

## இரவு 8-30வரை கடைகள் திறந்திருக்கும்?

கோட்டை, செவ்வாய்

போயா தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை வியாபார நிறுவனங்களைத் திறந்துவைப்பது சம்பந்தமாக மந்திரிசபை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் திரு. எம்.பி.டி.சற் ஸ்ரீவர்த்தன, வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன, கப்பல் துறை அமைச்சர் திரு. பி. கலுகல்லே ஆகியோர் இந்த உப குழுவில் அங்கம்வகிக்கின்றனர்.

காலை 8மணி தொடக்கம் மாலை 8-30மணிக்கு இடைப்பட்ட வேலைநேரத்தை இரு பகுதியான ஊழியர்களுக்கு வழங்குவதினால் வேலையில்லாப் பிரச்னை ஓரளவு நீங்குமென அரசாங்கம் கருதுகிறது.

## "இந்தியாவுக்கு பயிற்சிக்கு அனுப்புக"

வேலணை, செவ்.

பனம் பொருள் கொள்வனவு விற்பனவு செய்துவரும் வேலணை பனம்பொருள் உற்பத்தியாளர் விற்பனவுச் சங்கம் தமது சங்கத்தின் சார்பில் இருவரை அரசாங்க செலவில் தென் இந்தியாவிலுள்ள ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி மூன்றுமாதபயிற்சி அளிக்குமாறு கோரிக்கைத் தொழில்மந்திரிக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

## சுன்னாகம் ஐயனார்கோவிலில் ஆலயப் பிரவேசம்

யாழ்ப்பாணம், புதன்

சுன்னாகம் ஐயனார் கோவில் நேற்று அமைதியான முறையில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றதாகத்தெரியவருகிறது. முதல் தடவையாக சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுவோர் உள்வீதிக்கு சென்று வழிபட்டனராம்.

## யாழ்ப்பாணத்தில் குடும்பத்திட்டம்

### பிரிட்டிஷ் நிபுணர் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் குடும்பகட்டுப்பாடுத் திட்டம் வெற்றியளித்துள்ளதாம். அண்மையில் வடமாகாணத்துக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பிய பிரிட்டிஷ் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட நிபுணர் இதுபற்றி மகிழ்ச்சி தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். யாழ். சுகாதார அத்தியட்சகர்காரியாலயத்தையும், குடும்பக்கட்டுப்பாட்டுப் பகுதி யாழ். கிளையையும் பாராட்டி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் கடிதம் அனுப்பி வைத்துள்ளாராம்.

"மிகவும் சமய நம்பிக்கை நிறைந்த இந்தப் பிரதேசத்தில் குடும்பக்கட்டுப்பாடு எவ்வாறு செயல்படுத்துவதென்று கருதியவர்கள் இதுபற்றி நம்பிக்கையும் உற்சாகமும் பெற்றுள்ளார்கள். தொடர்ந்து கிராமங்கள் தோறும் குடும்பநலம் பற்றிப் போதனை செய்ய நல்ல பிரசார உத்தியோகத்தர்களை அனுப்ப யாழ். குடும்பக் கட்டுப்பாட்டுக் கிளைச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. கிராமப்புறங்களில் சென்று புள்ளி விபரம் எடுத்த மேற்படி இயக்குநகர் தனது குறிப்பில் சில முக்கிய விடயங்களைச் சேகரித்துள்தாக' அவ்வெளிநாட்டு நிபுணர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் என்றுமே குடும்பக்கட்டுப்பாட்டுடன் ஈடுபாடுடையவர்கள்என்றும் பச்சைமஞ்சள் போன்ற பல சுதேச மூலிகைகளை குடும்பக்கட்டுப்பாட்டுக்காக யாழ் தமிழ் மக்கள் பாவித்துவந்துள்ளதாகவும், தமிழ்மக்கள் சுகாதாரத்துக்கமைய மருந்துகளைப் பாவித்துள்ளார்களெனவும்மற்றும் கட்டுப்பாட்டின் மூலமும் சமய சம்பந்தமான விரதங்கள் ஆலய வழிபாடு போன்றவைகளை குடும்ப நலன் கருதி பல்லாண்டுகாலம் அனுசரித்துவந்துள்ளதாகவும் குடும்பத்திட்டங்களைச் சங்கம் தனது புள்ளிவிபரத்தில் தெரிவித்துள்ளதாம்

கட்டுப்பாடான மக்களைப் பெற்று உடல் உறுதியும் உணவு வசதியும் அளிப்பதையே கிராம மக்கள் விரும்புவதாகவும் யாழ்கிளை தெரிவித்துள்ளதாம்

வடமாகாணம் முழுவதும் இக்கருத்து நிலவுவதால் தமது குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரசாரம் பயன்பெறும் என்று அந்த வெளிநாட்டு நிபுணரின் அறிக்கை கூறுகிறது (கு வி ம)

வேலை நீக்கப்பட்ட

## மருந்து கலவையாளரை திருப்பி எடுக்கவும்

யாழ்ப்பாணம், புதன்

சிங்களமொழித் தேர்ச்சி காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட மருந்து கலவையாளர்களை மீண்டும் வேலையில்சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இதே காரணத்துக்காக மருந்து கலவையாளருக்குத் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் வருடாந்த சம்பள உயர்வை வழங்குமாறும் கோரும் மகஜரை தேசிய அரசாங்க சுகாதாரசேவைத் தொழிலாளர்சங்கம் சுகாதாரஅமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அம் மகஜரில் சங்கம் தெரிவித்துள்ள மற்றும் கோரிக்கைகள் வருமாறு:

அரசகருமமொழி அமுலுக்கு வந்தபின்னும் 1-5-68 க்குமுன்னும் நிரந்தரமாக்கப்பட்ட மருத்துவ மாதர்களுக்கு அரசகருமமொழி 3-ம் வகுப்பாகவும் அதன் பின் நிரந்தரமாக்கப்பட்ட மருத்துவ மாதர்களுக்கு அரசகருமமொழி 5-ம்வகுப்பாகவும் குறைக்கப்பட வேண்டும்.

மருத்துவ மாதர்களுக்கு இன்று கொடுக்கப்பட்டிருக்கும் பொது சௌக்கிய மருத்துவிச்சி என்ற பெயரை பொதுசௌக்கிய மருத்துவமாது என மாற்றி அமைக்க

(4-ம் பக்கம் பார்க்க)

## வட்டு. கி. சபை நடவடிக்கை

சுழிபுரம், செவ்வாய்

வட்டுக்கோட்டைக்கிராம சபையின் பன்னிரண்டு வட்டாரங்களிலுமுள்ள சோலை வரி கட்டாதவர்களுடைய விடுகளிலுள்ள பொருள்களை கிராமசபை பறிமுதல் செய்து வருகின்றது.

கிராமசபைக்குச் சேர வேண்டிய பணம் பாக்கியில்லாது இருக்கும்வரைதொடர்ந்து பொருள்களையும் வேண்டியமற்றும் உடைமைகளையும் எடுக்கவுள்ளதாக கிராமசபைத் தலைவர் தெரிவித்துள்ளார். கடந்த சில தினங்களாக எல்லா வட்டாரங்களிலும் சேகரிக்கப்பட்ட பொருள்களில் சிலவற்றை அவற்றின் சொந்தக்காரர்கள் பணத்தைக் கட்டி மீட்டுள்ளனராம்.

## தொழில் நீதிமன்றத்தில் பத்திரிகையாளர் வழக்கு

கொழும்பு செவ்

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் கடமையாற்றிய இரு பத்திரிகையாளர்கள் வேலைநீக்கஞ் செய்யப்பட்டது சம்பந்தமாக தொழில் கந்தோரில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இரு பத்திரிகையாளர்களும் வேலைநீக்கஞ் செய்யப்பட்டது சட்டத்துக்கு முரணானது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1964-ம் ஆண்டு இவர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டனர். இவ்வழக்கு இம்மாதம் 29-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

(சி பி. ஏ)

## வேலைக்குப் போகாதே என்றுர் தந்தை; இளம்பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்.

பீடித் தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்த்து வந்த இளம் பெண் ஒருவரை வேலைக்குப் போக வேண்டாம் என்றுர் தந்தை இதை ஏற்றுக் கொள்ள மறுத்த மகள் தற்கொலை செய்து கொண்டார். கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சின்னையர் மஞ்சுளாதேவி (வயது 16) என்பவரே நேற்று இவ்விதம் மரணமானவர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் விசாரணை நடாத்தினர். தந்தையார் இறந்தவரை வேலைக்குப் போகவேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறியதாகவும், இதைத் தொடர்ந்து இவர் நச்சுத்திராவகத்தை உட்கொண்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்ட மஞ்சுளா அங்கு காலமானர். தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## பிரமபுத்திரா பெருக்கெடுப்பு

புதுடில்லி, ஜூலை 14

அஸாமில் பிரமபுத்திரா நதியின் மட்டம் 37 அடிவரை உயர்ந்துள்ளது. நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்தால் வெள்ளப் பெருக்கு ஏற்படுமென அஞ்சப்படுகிறது.

கடந்த சில தினங்களாக இங்கு பலத்த மழை பெய்கிறது. தொடர்ந்து மழை பெய்துகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

"அப்பிறென்ரிசெஸ்" 18 வயதிற்குட்பட்ட மோட்டார் உதிரிப்பாக விற்பனைக்கும், மோட்டார் வாகனயந்திரங்கள் பராமரிப்பு, சீர்படுத்தும் வேலைக்கும் தேவை. விண்ணப்பிக்கவும்: ராமகிருஷ்ணுஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் போன் 7179. 3189

அனுபவமுள்ள லேத்மென் மூவர் தேவை. முன் அனுபவத்துடன் நேரில் காலை 10க்கும் 12க்குமிடையில் சமுகந்தரவும். பைனல் ரேணிங் வேக்ஸ், 103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், போன்: 7140. 3181

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலும், பாங்சால் வீதியிலுமுள்ள கட்டிடத்தின் சுவர்களை இடித்து மண், கல் ஆகியன அப்புறப்படுத்தக் கூடியவர் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். கே. அருணுசலம், செம்மணிவீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம். அல்லது த. நடராசா, 24/A, அல்பிறெட் பிளேஸ், கொழும்பு-3. 3175

ஆசிரியைகள்:

பாலர் பாடசாலைகளில் கடமையாற்ற ஆசிரியைகள் தேவை. போயா முன்தினமும் போயா தினமும் தகுந்த ஆசிரியர்களால் பாலர் கல்வி போதனைப் பயிற்சி அளிக்கப்படும். அல்லது ஜி. சி. ஈ. சித்தியடைந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். வி. எஸ். எஸ். மணியம், முகாமையாளர், பாலர் பாடசாலை, இணுவில். 3183

### கல்வி

ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை/விஞ்ஞானம், (உயர்தரம்) கலை, விசேட ஆங்கிலம், சிறுப்பர் பரீட்சை, சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம் பகல்/மாலை வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. விடுதி வசதியுண்டு. யூனிட்டெட் மகளிர் கல்லூரி, நெல்லியடி. 3186

### வகுப்புகள்

கலை:

பாட்டு, வயலின், நாட்டிய புதிய வகுப்புகளுக்கு 17-7-70 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அனுமதிக்கப்பெறுவர். க. கயிலாயநாதன், கலைக்கழக இயக்குநர், வட்டுக்கோட்டை. 3185

### விற்பனைக்கு

50 பரப்பு பனை மரக்காணி பண்டத்தரிப்புக் கிராம ஆஸ்பத்திரிக்குப் பின்னல் விற்பனைக்கு உண்டு பரப்பு ரூபா 250/- அளவில் சில்லாலை இளைப்பாறிய பிறின்ஸிப்பல் என். ஜேம்ஸ் அவர்களிடம் விசாரிக்கவும். 3188

நெற்காணி:

சுருவிலில் இருக்கும் திறமான நெற்காணி (வெள்ளடைக்குளம்) பரப்பு 154 விற்பனைக்குண்டு. விரும்பியவர்கள் நேரில் சந்திக்கவும். செல்லமாம் அந்தோனிப்பிள்ளை, திருக்குன்றம், கரம்பன், ஊர்காவற்றுறை. 3176

சரவணை கிழக்கில் இருக்கும் வெத்தியான் வயல் 23 பரப்பு சீமா கரப்பியன் 36 பரப்பு இலங்கையன் தேவன்கலடு 5 பரப்பு ஆகிய மூன்று காணிகளும் விற்பனைக்குண்டு. அவை எவ்வித பாரம், பராதீனப்படுத்தப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றேன். தொடர்பு கொள்ளவும். மு. இரத்தின கோபால், சந்திரா, வேலணை. 3184

லொறி:

33 ஸ்ரீ 6203 சவுளற் லொறி உடனே விற்பனைக்குண்டு. ஜஞ செங்கல் ஓட்டுத்தொழிற்சாலை, கண்டாவளை. 3171

## உதவி அமைச்சர் 17-ம் திகதி யாழ். வருகிறார்

மல்லாகம், செவ்வாய் கலாசார உதவி அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறி இம்மாதம் 17-ந் திகதி வடபகுதிக்கு வரவிருக்கிறார். வரவேற்பு ஒழுங்குகளை சுதந்திரக்கட்சி சார்பில் திரு எம். துரைராஜா கவனித்துவருகிறார். பல கலாசார அபிவிருத்தி ஸ்தாபனங்கள் உதவி அமைச்சரைச் சந்திக்கவிருக்கின்றன.

## விளம்பரம்

### கச்சாய் கிராமசபை

கிராமசபை இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்கான இரு அறைகள் கட்டுவதற்கான கேள்விகள், கச்சாய் கிராமசபை அக்கிராசனரால் 1970-ம் ஆண்டு ஜூலை 30-ந் திகதி காலை 9-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள், இவ்வலுவலகத்தில் அல்லது யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் ரூபா ஐயாயிரத்துக்கு (ரூபா 5,000/-) மேற்பட்ட வேலைகளுக்கெனப் பதியப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரங்களில் 1970-ம் ஆண்டு ஜூலை 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரை ரூபா 50/ வைப்புப் பணமாகவும் ரூபா 10/- பத்திரப்பணமாகவும் கட்டியதன் பேரில் விநியோகிக்கப்படும். இதில் பத்திரப்பணமான ரூபா 10/- திருப்பிக் கொடுபடமாட்டாது.

ஏனைய விபரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
அ. த. சிதம்பரப்பிள்ளை,
அக்கிராசனர்,
கச்சாய் கிராமசபை,
கொடிகாமம்.
14-7-1970. 2366

## விளையாட்டுப் போட்டி

கொழும்புத்துறை, செவ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டிகள் இன்று பிற்பகல் வித்தியாலய அதிபர் திரு. பொ. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## யாழ். இந்து இல்ல விளையாட்டுப் போட்டிகள்

# 12 புதிய சாதனைகள் பசுபதி இல்லம் அமோக வெற்றி

யாழ்ப்பாணம், புதன் கடந்த வெள்ளிக்கிழமை பூர்த்தியடைந்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுக்களின் போது 12 புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டு ஒரு சாதனை சமப்படுத்தப்பட்டது

கடந்த 31 ஆண்டுகளில் 13-வது முறையாக பசுபதி இல்லம் 151 1/2 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றது. சபாபதி இல்லம் 77 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தையும், செல்வத்துரை இல்லம் 71 1/2 புள்ளிகளுடன் மூன்றுமிடத்தையும் பெற்றன. அஞ்சலோட்டங்களுக்கான வெற்றிக்கிண்ணமும் பசுபதி இல்லத்திற்கே கிடைத்தது. கயிறிழுத்தல் போட்டிக்கான வெற்றிக்கிண்ணமும் இல்ல அலங்கார சோடனைக்கான வெற்றிக்கேடயமும் செல்லத்துரை இல்லத்திற்குக் கிடைத்தன.

14 வயதுக்கு உட்பட்ட பிரிவைச் சேர்ந்த காசிப்பிள்ளை இல்லத்தைச்சேர்ந்த ஏ. எச். எம். ஜபருல்லா என்ற வீரர் தாம் போட்டியிட்ட 3 நிகழ்ச்சிகளிலும் புதிய சாதனைகளை ஏற்படுத்தி மிகச்சிறந்த வீரர் என்ற பாராட்டைப் பெற்றார். நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் இவர் தாண்டிய தூரமாகிய 18 அடி 11 1/2 அங்குலம் அகில இலங்கை தரமாகக் கணிக்கக்கூடியது. இப்போட்டிகளில் ஏற்படுத்தப்பட்ட புதிய சாதனைகள் பின்வருமாறு:-

19 வயதிற்குட்பட்டவர்கள்

100 மீட்டர் 12.2 விநாடி வி ரவிமன்னன் [நாகலிங்கம்]

17 வயதிற்குட்பட்டவர்கள்:

100 மீட்டர் 12.7 விநாடி எம் சிவகுமாரன் [பசுபதி]
200 மீட்டர் 27.2 விநாடி எம் சிவகுமாரன் [பசுபதி]
400 மீ. 63.0 விநாடி ஆர் சந்திரசேகரம் [பசுபதி]
உயரம் பாய்தல் 5 அடி 3 அங்குலம் ஆர் விஜயகுமார் [செல்லத்துரை], குண்டெறிதல் 32 அடி 6 1/2 அங்குலம் ஆர் விஜயகுமார் செல்லத்துரை], அஞ்சலோட்டம் 4X100 மீ. 55.2 விநாடி [பசுபதி இல்லம்]

16 வயதிற்குட்பட்டவர்கள்

100 மீ. 13 விநாடி என் அசோகன் [சபாபதி] முன்னைய சாதனையைச் சமப்ப

...நிலையில் தமது காலத்தில் விளையாட்டுத்துறையில் பயிற்சிபெற்று வந்ததையும், இன்று போல் அக்காலத்தில் கல்லூரிக்கருகில் விளையாட்டு மைதானம் இருக்கவில்லையென்பதையும் நினைவூட்டினார்.

## நாளை நடைபெறும் 7 மைல் மரதன் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், புதன் ஐம்பதுக்கு மேற்பட்ட பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக மாணவர்கள் கலந்து கொள்ளும் ஏழுமைல் மரதன் ஓட்டப்போட்டி ஒன்று நாளை வியாழக்கிழமைபிற்பகல்நடை பெறவிருக்கிறது. இப் போட்டி பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஆரம்பமாகி வசாவிளான் சந்தியை அடைந்து பலாலிவீதி வழியாக பலாலிச் சந்தியை அடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக மயிலிட்டிச் சந்தியை அடைந்து கட்டுவன் வீதிவழியாக கட்டுவன் சந்தியை அடைந்து அங்கிருந்து மீண்டும் பல்கலைக் கழகத்தை வந்தடையும்.

## அகில இலங்கைக்கும் ஒரே ஆசிரியர் சங்கம்

### வ. மா. ஆ. சங்க தீர்மானம்

மாவிட்டபுரம், செவ். 'ஆசிரிய ஆலோசக தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களைக் கவனத்திற்குக் கொண்டு அவர்களுக்கு விசேடபடி வழங்க வேண்டும்' என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் வடமாகாண ஆசிரிய சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்களில் சில வருமாறு:

பன்னிரு கோரிக்கைகளைப் பெறுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறு தேசிய ஆசிரியர் சங்க சம்மேளனத்தையும் வடமாகாண ஆசிரியர் சங்கத்தையும் அகில இலங்கை ஆசிரியர்சங்க சம்மேளனத்தையும் வடமாகாண ஆசிரியர் சங்கம் வற்புறுத்துகிறது.

நாட்டைக் காக்கும் நிதிக்கு வடமாகாண ஆசிரியர் சங்கம் ரூபா 1001 நன்கொடையாகக் கொடுக்க வேண்டும்.

சேவை மூப்பு, தகைமை என்பன கணிக்கப்படாமல் செய்யப்பட்ட பதவியுயர்வுகளைக் கல்வி அமைச்சர் புனராலோசனை செய்யமுன் வந்தமையைப் பாராட்டுகின்ற தாது நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

சமதகைமை பெற்ற சிங்களமூல ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் உரிமைகளும் பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் ஆகியோருக்கு வழங்கப்படவேண்டும்.

பண்டிதர், வித்துவான், புலவர் பரீட்சைகளில் சித்தியடைந்திருப்போரையும் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்.

உடற்பயிற்சி ஆசிரியர் சம்பளப்படி உயர்வுகள் பெறுவதற்கு படிஉயர்வு பரீட்சையில் சித்தியெய்த வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கும்படி இச்சபை கோருகிறது.

கூடியகாலம் சேவைசெய்த தகைமையுடைய ஆசிரியர் 1-ம், 2-ம்தர அதிபர் விசேட ஆசிரியர் பதவிஉயர்வுகள் வழங்கப்பட்டபோது புறக்கணிக்கப்பட்டிருப்பதால் முந்திய ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டபின் இப்பதவிகளுக்குச் செய்யப்பட்ட நியமனங்களை புனராலோசனை செய்ய வேண்டும்.



நீங்கள் வீடு கட்டும் பொழுது

நவீன விஞ்ஞான தையல் கலாசாலை திறப்பு விழா

அன்புடையீர்!

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கே. கே. சங்கரப்பிள்ளை கட்டிடத்தில், 95/3ம், இலக்க மேல்மாடியில் நிறுவப்பட்டிருக்கும் மேற்படி கலாசாலையை இன்று (15-7-70) மாலை 4-30 மணியளவில்

கே. கே. சங்கரப்பிள்ளை கட்டிட உரிமையாளர்

திரு. கே. கே. எஸ். இரத்தினம் அவர்கள்

திறந்துவைப்பார்கள்.

இவ்விழாவிற்கு அனைவரும் சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

95/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எஸ். டி. ராஜா அதிபர் ஓ. கே. பாலன் மனேச்சர்

இடமாற்றம்

ஜபார்ஜிபிறதர்ஸ்

218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

எமது ஸ்தாபனத்தின் மீன்பிடி வலைகள் நூல்கள் முதலியனவற்றின் விற்பனைப்பகுதி 17-7-70 முதல் ஸ்ரான்லி வீதியிலுள்ள 6-ம் இலக்க புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட இருக்கின்றது. அன்று தொடக்கம் மேற்படி விலாசத்திற்கு தொடர்பு கொள்ளும்படி வாடிக்கையாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

மேற்படி புதிய கட்டடத்தில் எமது ஸ்தாபனம் உற்பத்திசெய்யும் புடவை வகைகளும் விற்பனை செய்யப்படுமென்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

2355 ஜபார்ஜிபிறதர்ஸ்

2வது வாரம்!

ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்

காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி நடித்த

மாவீரன் ஜெயசீலன்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த

இரு கோடுகள்

கடைசி இரு தினங்கள்

வின்ஸர் — யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர் — கே. ஆர். விஜயா நடித்த

பால்மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் வீடு கட்டும் பொழுது
# ஒட்டுப் பலகை
# கதவுகளை பாவித்து



விலையை 40% குறைக்கவும்
விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.

ஒட்டுப் பலகை கதவுகள் பிரமிக்கத்தக்கதன்மை; நீண்டகாலம் பாவிக்கக் கூடியவை. எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புல்லாக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்படுபவை. பிரம்பலிகை; கூலன்செய்தற்கின் கூப ஆகாய சேகைகளிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும்:

உயரம் : 6' 9"
அகலம் : 2' 3", 2' 9", 3' 6"
கனம் : 1¼"

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை நீர் நன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
நா: 18, பலாலி வீதிச் சந்தி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92903

THUNDERFLASH


லத்துரை], அஞ்சலோட்டம் 4X100 மீ. 55.2 விநாடி [பசுபதி இல்லம்]

16 வயதிற்குட்பட்டவர்கள்

100 மீ. 13 விநாடி என் அசோகன் [சபாபதி] முன்னைய சாதனையைச் சமப்படுத்தினார்

200 மீ. 26.4 விநாடி வை நரேன் [செல்லத்துரை] பரிதிவட்டம் வீசுதல் 107' 7 அங்குலம் வி விஜயவேள் [பசுபதி]

14 வயதிற்குட்பட்டவர்கள்

100 மீ. 13 0 விநாடி ஏ எச் எம் ஜவருல்லா, [காசிப்பிள்ளை] உயரம் பாய்தல் 4 அடி 10 அங்குலம் ஏ எச் எம் ஜவருல்லா [காசிப்பிள்ளை] நீளம்பாதல் 18 அடி 11 1/2 அங்குலம் ஏ எச் எம் ஜவருல்லா [காசிப்பிள்ளை]

பிரிவுச் 'சாம்பியன்' கள்

14 வயதிற்குட்பட்டவர்கள் ஏ எச் எம் ஜவருல்லா [காசிப்பிள்ளை]

16 வயதிற்குட்பட்டவர்கள் வை நரேன் [செல்லத்துரை]

17 வயதிற்குட்பட்டவர்கள் எம் சிவகுமாரன் [பசுபதி], ஆர் விஜயகுமார் [செல்லத்துரை]

19 வயதிற்குட்பட்டவர்கள் வி பாஸ்கரன் [நாகலிங்கம்]

விளையாட்டுப் போட்டிகளுக்குப் போஷகராக இருந்தவராகிய ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர் திரு. வி. ஏ. சுப்பிரமணியம் 1500 மீட்டர் ஓட்டப் பந்தயத்திற்காக வழங்கிய வெற்றிக்கிண்ணம் முதல் முறையாக பசுபதி இல்லத்தைச் சேர்ந்த திரு. டி. விஜயானந்தன் என்பவருக்குக் கிடைத்தது. திரு. வி. சுப்பிரமணியம் 1934—36ல் யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் ஒரு மைல் தூர ஓட்டத்திற்கான சாதனையை வைத்திருந்தவர் என்பதும், யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருள் ஒருவரும், முன்னுள் இந்துக்கல்லூரியில் ஆசிரியராய் இருந்தவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி சுப்பிரமணியம் வெற்றிக்கிண்ணங்களை வீரர்களுக்கு வழங்கினர்.

கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம், நன்றியுரை கூறிய ஆசிரியர் திரு. இ. மகாதேவா ஆகியோர் தங்கள் உரையில் இவ்வாண்டு இறுதியில் ஓய்வுபெறவிருக்கும் மேற்படி கல்லூரியில் 1938 முதல் விளையாட்டுத் துறைப் போதனுசிரியராக இருந்துவரும் திரு. பொ தியாகராசாவின் உன்னத சேவைகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

போஷகராக வந்திருந்த திரு சுப்பிரமணியம் தமது உரையில் கஷ்டமான சூழ்

வேண்டும்.

சேவை மூப்பு, தகைமை என்பன கணிக்கப்படாமல் செய்யப்பட்ட பதவியுயர்வுகளைக் கல்வி அமைச்சர் புனராலோசனை செய்யமுன் வந்தமையைப் பாராட்டுவது.

கடந்த காலத்தில் ஆசிரியர்களின் வேலைநாட்கள் அதிகரிக்கப்பட்டதையிட்டு ஆசிரியர்கள் மத்தியில் நிலவிவரும் பெரும் அதிருப்தியை நீக்கும் பொருட்டு கல்வி நிபுணர்களைக் கொண்ட ஒரு விசேட ஆராய்வு சபையினை நியமிக்க வேண்டும்.

சேவை மூப்பு அட்டவணை தராதரத்துக்கமைய உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

இனிவரும் பதவியுயர்வுகளை ஆசிரியர் சங்கங்களுடன் ஆலோசித்துத் திட்டமியற்றிச் செயலாற்ற வேண்டும்.

ஆசிரிய சேவையிலுள்ளவர்கள் பட்டதாரியானவுடன் முன்பு போல் சம்பள வுயர்வுடன் கூடிய பட்டதாரிக்குரிய சம்பளம் வழங்க வேண்டும்.

10 வருட சேவை பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கு சேவைக்காலப் பயிற்சிமூலமாகவோ அல்லது வெளி மாணவர்களாகவோ பரீட்சைக்குத் தோன்ற அனுமதிக்க வேண்டும்.

பயிற்றப்பட்ட 10 வருட சேவை புரிந்த சுயபாஷா ஆசிரியர்களுக்கு அவ்வவ் விசேட படிப்புக்குரிய மிகக் குறைந்த தராதரத்துடன் ஒருவருட விசேட பயிற்சி பெற வயதைப் பாராட்டாது அனுமதிக்க வேண்டும்.


ஆசிரிய தராதரம்பெற்ற ஆசிரியர்கள் தங்கள் இறுதிச் சம்பளம் பெற்றபின் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் போல் சம்பள உயர்வு அளிக்கப்படவேண்டும்.

எந்நிலையிலாவது ஆசிரியப் பயிற்சிபெற்ற எவ்வாசிரியரும் ஒரு பட்டதாரியானல் கல்வித் தராதரத்தின் சமநிலைநோக்கி, அவர் பயிற்றப்பட்ட பட்டதாரியாகவே கொள்ளப்படவேண்டும்.

சகல தோட்டப்பாடசாலைகளையும் அரசாங்கம் கையேற்று அவ்வப்பாடசாலை ஆசிரியரின் சேவைக்காலத்தைச் சம்பள உயர்வுக்கும், சேவை மூப்புக்கும் இளைப்பாற்றுச் சம்பளத்துக்கும் அங்கீகரிக்க வேண்டும்.

பதிவுசெய்த தொழிற்சங்கங்களுக்கு இலவச தபால் வசதிகள் அளிக்கவேண்டும்.

அகில இலங்கையிலுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரேயொரு ஆசிரியர் சங்கம் அமைப்பதற்கு காலம்தாழ்த



## புதிய வழக்கறிஞர்

யாழ்ப்பாணம் அப்துல் ஹமீது வீதியைச் சேர்ந்த ஜனுப் முஹம்மது முஹிதீன் மன்சூர் இம்மாதம் 6-ம் திகதி உயர்நீதிமன்ற வழக்கறிஞராக நீதியரசர்கள் திரு. சிறிமான்ன, திரு. வீரமந்திரி ஆகியோர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் காலஞ் சென்ற ஜனுப் எம். ஸி. முஹம்மது முஹிதீன், திருமதி முஹம்மது முஹிதீன் ஆகியோரது சிரேஷ்ட புதல்வரும், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பழையமாணவருமாவர். இவர் சிலகாலம் கொழும்பு மாளிகாவத்தை முஸ்லிம் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.


இன்று மட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
சனிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
பணக்கார பிள்ளை
(புதிய வெளியீடு!)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6 30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
எம் ஜி. ஆர். — பத்மினி
நடித்த
மன்னாதி மன்னன்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Maggie Smith, Robert Stephens
in
THE PRIME OF MISS JEAN BRODIE
(Adults Only)

MANOHARA JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Rita Tushingham
in
DIAMONDS FOR BREAK FAST

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — கே. ஆர். விஜயா
நடித்த
பால் மனம்

17-ந் திகதி முதல்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் (இருவேடங்களில்)
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த
உத்தமபுத்திரன்
(புதிய கொப்பி)

இன்று முதல்
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெவிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'
துணைவன்
கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கத்தாவில் பொலிஸ் வான்கள் மீது கல்வீச்சு; கும்பலைக்கலைக்க பொலிஸ் சுட்டது

## ஒரு நாள் ஹர்த்தாலில் ரயில், பஸ் சேவை சீர்குலைவு

கல்கத்தா, ஜூலை 14

கல்கத்தாவிலும் மற்றும் சில இடங்களிலும் இன்று பொலிஸ் வாகனங்கள் மீது கல்வீசப்பட்டது. ஓர் இடத்தில் கல் வீச்சில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்குப் பொலிசார் சுட்டனர் கல் வீச்சினாலோ, பொலிசார் சுட்டதனாலோ எவரும் காயமடையவில்லையெனப் பொலிசார் தெரிவித்தனர். ஹர்த்தால் ஆரம்பமான சில மணி நேரத்தில் நான்கு இடங்களில் பொலிஸ் வாகனங்கள் மீது கல்வீச்சு சம்பவம் நடைபெற்றதாகப் பொலிசார் தெரிவித்தனர். ரயில்வே வேலைத்தலம் ஒன்றில் எறிகுண்டு வீசப்பட்டதில் ஒரு தொழிலாளி காயமடைந்தார். கல்கத்தாவில் ட்ராம், பஸ் சேவைகள், ரயில் சேவைகள் சீர்குலைந்தன. 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இடங்களுக்கு அரசியல் தலைவர்கள் செல்ல முயன்றபோது பொலிசாரால் தடுக்கப்பட்டனர்.

மேற்கு வங்காளத்தில் இன்று ஒரு நாள் நடைபெற்ற ஹர்த்தால் ஆரம்பமான சில மணிநேரத்துக்குள்ளேயே ரயில்சேவை சீர்குலைந்தது.

மேற்கு வங்காள சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்றும் விரைவில் தேர்தல் நடத்த வேண்டுமென்றும் மத்திய ரிசர்வ் பொலிசை வாபஸ் பெற வேண்டுமென்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்ஸிஸ்ட் கட்சியும் கோரிக்கை விடுத்து இக்கோரிக்கையை வலியுறுத்தும் பொருட்டு இன்று ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தன.

ஹர்த்தால் இன்று அதிகாலை ஆரம்பமானதிலிருந்து நீண்டதூர ரயில்களும், நகர்ப்புற ரயில்களும் ஓடவில்லை. கல்கத்தா நகரம் பொதுவாக வெறிச்சோடிக் கிடந்தது. இராணுவத்தினரும் பொலிசாரும் பல இடங்களிலும் ரோந்து புரிந்தனர். கேந்திர ஸ்தானங்களில் இராணுவம் காவல் புரிகிறது.

ஹர்த்தாலையொட்டி அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழாமல் தடுக்கவும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் அமைதியைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

கல்கத்தா, ஹௌரா, ஹூக்ளி ஆகிய நகரங்களில் 144 தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி எந்த இடத்திலும் ஐந்துபேருக்கு மேல் கூடிநிற்க முடியாது. சமூக விரோதிகள் என்று கருதப்படும் கேடிகள் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். மொத்தம் கைதுசெய்யப்பட்ட 200 பேரில் 100 பேர் கல்கத்தா நகரிலுள்ளவர்கள்.

## இஸ்ரேலும் எகிப்தும் பூர்வாங்கப் பேச்சு நடத்தலாம்

### இஸ்ரேல் அமைச்சர் கூறுகிறார்

ஜெருஸலேம், ஜூலை. 14

மேற்காசியப் பிரச்னைக்கு அமைதித் தீர்வுகாண்பதற்கு இஸ்ரேலும் ஐக்கிய அரபுக் குடியரசும் பூர்வாங்கப் பேச்சு நடத்தலாமென்று இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் திரு. எபா இபான் இஸ்ரேல் ஆட்சிமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார். முதலில் நடைபெறும் பூர்வாங்கப் பேச்சுக்கள் பயனளித்தால் பின்னர் உயர்...

...த்தை நடத்தினர். வாஷிங்டனிலுள்ள சோவியத் தூதருடன் அமெரிக்க உதவி ராஜாங்கக் காரியதரிசி திரு. சிஸ்கோ ஆலோசனை செய்தார்.

மேற்காசிய நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு அமெரிக்கா கடைசியாகத் தெரிவித்த திட்டம் பற்றியே ஆலோசனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் திட்ட...

### மணப் பெண்ணின் ஆடை

சென்னை, ஜூலை 14

இந்திய ராஷ்டிரபதி திரு வி. வி. கிரி வர்த்தகசபையில் ஒரு சுவையான செய்தியை வெளியிட்டார்.

அஸ்ஸாமில் 7 லட்சம் பெண்மணிகள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கி...

## கடத்தலைத் தடுக்க தொண்டர் படை

### தீவுப்பகுதியில் அமைக்கப்படும்

வேலணை, செவ்.

"மக்கள் அமைதியாகவும் பீதியின்றியும் வாழவேண்டுமானால் இங்கு இராணுவம் வரும் அபாயத்தைத் தடுக்க மக்களே முன்வருதல் வேண்டும். இதற்கு ஒரேவழி மக்கள் தொண்டர்களாக முன்னின்று கள்ளக்கடத்தல் நடைபெறாது முறியடிக்கவேண்டும்" என வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் போது ஊர்காவற்றுறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் தெரிவித்தார். தீவுப்பகுதிக்காரியாதிகாரி திரு. விநாயகலிங்கமும் கிராமசேவகர்களும் கலந்து கொண்ட இவ் ஆலோசனை கூட்டத்தின் போது ஒவ்வொரு கிராம சேவகர் பகுதியிலும் 50 தொண்டர்களைத் தெரிவு செய்து கள்ளக்கடத்தல் நடைபெறுவண்ணம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

— —

### தமிழரசுக்குழு நாளைகூடும்

நல்லூர், புதன்

தமிழரசுக்கட்சியின் ஆட்சி மன்றக் குழுக்கூட்டம் கொழும்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் இல்லத்தில் நாளை கூடவிருக்கிறது. தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் பேசும் சமூகத்தினரின் நிலை பற்றிக் குழு ஆராயும்.

— —

### கிரி நன்கொடை

புதுடில்லி, ஜூலை 14

அமரர் ... திரி டிரஸ்டி நிதிக்கு குடியரசுத்தலைவர் திரு. வி. வி. கிரி...

### சிங்கள திரைப்படம் இந்தியா வாங்கும்

கோட்டை, செவ்.

"வன்சார" என்னும் சிங்கள படத்தை வாங்குவதற்காக, இந்திய சலனப்பட ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் ஒப்பந்தம்செய்துள்ளது. இப்படம் இந்தியாவில் திரையிடப்படும். இருநாடுகளுக்குமிடையே கலாச்சாரப் பரிவர்த்தனையை உறுதிப்படுத்துமுகமாகவே இந்தியா இப்படத்தை வாங்குகிறது. இந்திய அரசாங்கம் சிங்களப்படமொன்றை வாங்குவது இதுவே முதல்தடவையாகும்.

இப்படத்துக்குரிய உலக பதிப்புரிமையை அவர்கள் கேட்டதாகவும், ஆனால் இந்தியாவுக்கு மட்டுமே பதிப்புரிமை கொடுக்கப்பட்டதாகவும் இப்படத்தை தயாரித்த திரு. எஸ். ஏ. சோமரத்தின தெரிவித்தார்.

### பிரதோஷ உற்சவம்

காரைநகர், செவ்.

இம்மாதம் 16-ம் திகதி வியாழக்கிழமை ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் சிவன் கோவில்பிரதோஷ உற்சவம் நடைபெறவிருக்கிறது மாலையில் பிரதோஷ பூசையும் பிரதோஷ நாயகர் வீதி உலாவும் நிகழும்.

— —

### 'காணி' உறுதி யாருடையது?

கொக்குவில் மேற்கைச்...

### அச்சுத் தொழிலாளர் தொழிற் சங்கம் உதயம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள அச்சுத் தொழிலாளர் தமக்கென ஒரு தொழிற்சங்கத்தை நேற்று முன்தினம் ஸ்தாபித்தனர். ஆஸ்பத்திரி வீதி, 72-ம் இலக்கத்திலுள்ள லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனக் காரியாலயத்தில் திரு வ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஐவர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஐக்கிய அச்சக ஊழியர் சங்கத்தில் இணைவதென்றும் தொழிலாளரின் குறைபாடுகள்பற்றி தொழில் மந்திரியுடன்வடபகுதி விஜயத்தின் போது அவரைப் பேட்டி கண்டு முறையிட்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்படி கோருவதெனவும் விரைவில் யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா அச்சக ஊழியர்களையும் கொண்ட மகாநாடு ஒன்றைக் கூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

— —

### 21-வது ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை சன சமூக நிலையத்தின் 21-வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 18-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இதனையொட்டி அன்று பிற்பகல் மெய்வல்லுனர் போட்டிகளும் இரவு பொதுக்கூட்டமும் இசைமற்றும் நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன. சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா ரி. ஏ. ஜே. மதுரநாயகமும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப்பும் கலந்துகொள்கின்றனர்.

## நீர்வசதியின்றி புத்தூரில் 40 ஏக்கர் விவசாயம் பாழ்

புத்தூர், செவ்வாய்

புத்தூர் நிலாவரைக் கிணற்றின் மூலம் நீர்வசதி பெற்று வந்த சுமார் 40 ஏக்கர் விவசாயம் நீரின்றிப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு இயங்கிவந்த இரு நீரிறைக்கும் யந்திரங்களும் பழுதடைந்துவிட்டதே இதற்குக்காரணமாகும். கடந்த இருவாரகாலமாக நீரிறைக்கப்படாததால் குறித்த விவசாயத்திட்டத்தில் பயிர்கள் காய்ந்துவிட்டன. வாழை, கத்தரி, மிளகாய் போன்ற பயிர்கள் இங்கு பயிரிடப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்தும் பயனேற்படவில்லையென்றும், நிலைமை கவனிக்கப்படாதவரை இந்நிலத்திலான விவசாயத்தையே கைவிட்டுவிடவேண்டியதுதானென்றும் சம்பந்தப்பட்டவிவசாயிகள் தெரிவித்தனர்.

## பிரதமரின் தேசிய நோக்கு பற்றி உதவி மந்திரி மஜீத்

கோட்டை, செவ்வாய்

'தமிழரசுக் கட்சியினரோடோ, அன்றி தமிழ் காங்கிரஸ் கட்சியோடோ கலந்தாலோசிக்காமல், தமிழ் மக்கள் சார்பில் தமிழர் ஒருவருக்கு மந்திரிப் பதவியை வழங்கினார் சிறிமாவோ, இதுவொன்றே பிரதமரின் தேசிய நோக்கத்தைப் பிரதிபலிக்கிறது'.

இவ்வாறு உதவி தகவல் மந்திரி திரு. அப்துல் மஜீத் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'கடந்த அரசாங்கத்தில் யு. என். பி. தமிழரசுக்கட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து ஒரு அமைச்சர் பதவியை வழங்கியது. ஆனால் மக்கள் அரசாங்கம் தேசிய ஒற்றுமை இந்த நாட்டில் ஏற்பட வேண்டுமென்பதற்காக சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் பிரதிநித்துவம் அளித்துள்ளது. இந்த நாட்டின் உண்மையான தேசிய ஐக்கியத்தை பிரதமர் நிச்சயம் ஏற்படுத்துவார்'.

— —

### விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் நீதி மன்றத்தில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருந்த இரு வழக்குகள் ஒத்திப் போடப்பட்டன. அசைஸ் விசாரணை இன்று காலை நடைபெறும்.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 15—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-00 முத்திநெறி, 7-00 நிலையஒலிப்பதிவுகள், 7-15 உரை, 7-45வாராந்த நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் திரு.எபாஇபான் இஸ்ரேல் ஆட்சிமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார். முதலில் நடைபெறும் பூர்வாங்கப் பேச்சுக்கள் பயனளித்தால் பின்னர் உயர்மட்டப் பேச்சுநடத்தி ஓர் உடன்பாட்டுக்கு வரமுடியுமென்றும் திரு. இபான் தெரிவித்தார். இதே சமயம் மேற்காசிய நிலைமை பற்றி அமெரிக்காவும், ரஷ்யாவும் தொடர்ந்து ஆலோசனைகள் நடத்தி வருகின்றன.

ஐக்கிய அரபுக் குடியரசு வெளிவிவகார அமைச்சர் ஜுைப் சியாத் சோவியத் வெளிவிவகார அமைச்சர் திரு. குரோமிக்கோவுடன் நேற்று மீண்டும் பேச்சுவார்

மேற்காசிய நெருக்கடிக்குத்தீர்வுகாண்பதற்கு அமெரிக்கா கடைசியாகத் தெரிவித்த திட்டம் பற்றியே ஆலோசனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் திட்டத்தை சோவியத் யூனியனும் ஐக்கிய அரபுக் குடியரசும் ஓரளவு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் சில திருத்தங்கள் செய்யவே அவை விரும்புவதாகவும் ராஜீய வட்டாரங்கள் தெரிவித்தன.

சோவியத் அமெரிக்க முயற்சிகள் மேற்காசியப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் சிறிது முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஐ. நா தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# சடலம் எடுப்பதில் இரு பிரிவினர் கைகலப்பு

## பொலிஸ் சுட்டதில் 4 பேர் பலி

சென்னை. ஜுலை.14 சிறிது கிராமமொன்றில் வாழும் இந்துக்களில் இருபிரிவினருக்கிடையில் ஏற்பட்ட மோதலைச் சமாளிக்க பொலிசார் சுட்டதில் நால்வர் கொல்லப்பட்டனர். மற்றுஞ் சிலர் காயமடைந்தனர். 16 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

ஒரு சடலம் எடுத்துச் செல்வது சம்பந்தமாக இருதரப்பினருக்கிடையிலும் மோதல் ஏற்பட்டதாம்

இச்சம்பவம் பற்றி விசாரணைசெய்வதற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது மாநாடு

## அடுத்த வருடத்துக்கு ஒத்திவைப்பு

மாஸ்கோ, ஜுலை 14

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது மகாநாடு அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

சென்ற நான்குவருடமாக மகாநாடு நடைபெறவில்லை இவ்வருடம் மகாநாடு நடைபெறுமென்று மூன்று வாரங்களுக்கு முன்னர் தான் கட்சியின் தலைவர் திரு. பிரஸனேவ் அறிவித்திருந்தார். மகாநாடு அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை ஒத்திப் போடப்பட்டிருப்பதாக மத்திய குழு அறிவித்தது காரணம் எதுவும் தெரிவிககப்படவில்லை.

— —

### சந்திப்பு

சென்னை, ஜுலை 13

சென்னை நகருக்கு விஜயம் செய்த ராஷ்டிரபதி திரு வி. வி. கிரி மாஜி ராஷ்டிரபதி திரு. ராதாகிருஷ்ணனையும், திரு. ராஜாஜியையும் சந்தித்துப் பேசினர்.

### 14 பேர் பலி

ஜம் நகர், ஜுலை 14

ஜம்நகரில் நேற்று மாலை இந்திய விமானப் படை விமானமொன்று விபத்துக்குள்ளானதில் மாண்டவர் தொகை இப்போது பதினொன்காக அதிகரித்திருக்கிறது.

— —

### போதைப் பெருள் கடத்தல்

லண்டன், ஜுலை 14

கடந்த புதன்கிழமை இந்தியாவிலிருந்து லிவர்ப்பூல் துறைமுகத்தில் வந்து நின்ற கப்பலில் சேமியா பொட்டலங்களுள் ரூ. 72 லட்சம் மதிப்புள்ள போதைப் பொருள்கள் இருப்பதை பிரிட்டிஷ் சுங்க இலாகா அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இது சம்பந்தமாக ஜான்ரோ, சிட்னி கோஹன் என்னும் இரு பிரிட்டிஷ் வர்த்தக டைரக்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

வி. வி கிரி வர்த்தகசபையில் ஒரு சுவையான செய்தியை வெளியிட்டார்.

அஸ்ஸாமில் 7 லட்சம் பெண்மணிகள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் இது அவர்களுடைய வாழ்க்கைமரபு என்றும் அஸ்ஸாமியப் பெண் தனது திருமணத்துக்கான ஆடைகளைத் தானே செய்துகொள்ள வேண்டுமென்பது குடிமரபு என்றும் திருமண ஆடைகளை நெய்துகொள்ள முடியாத பெண்ணுக்குத் திருமணமே நடப்பது கடினம் என்றும் தெரிவித்தார்.

### பேச்சுவார்த்தை

பொன், ஜுலை 14

சேலம் உருக்கு ஆலை பற்றியும் தமிழ் நாட்டில் உருக்கு தொழில் வளர்ச்சிக்கு மேற்கு ஜேர்மனி நிதி தொழில் நுணுக்க உதவிகள் அளிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் பற்றியும் ஜெர்மன் பொருளாதார ஒத்துழைப்புஅமைச்சர் திரு எர்கார்ட் என்பவருடன் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.

அரக்கோணத்தில் உருக்கு குழாய்தொழிற்சாலை ஒன்றை ஜெர்மன் கம்பனியான மானஸ்மான் உதவியுடன் ஆரம்பிப்பது பற்றியும் ஓர் உடன்படிக்கை மேற்கொண்டுள்ளார்.

— —

### மூளைக்கோளாறு ஆராய்ச்சி நிலையம்

சென்னை, ஜுலை. 14

இலங்கை மகாபோதி சங்கம் பொது மக்களின் உதவியுடனும் சர்வதேச உதவியுடனும் தமிழ்நாடு அரசாங்கம் மூளைக்கோளாறு பற்றிய ஆராய்ச்சி நிலையம் ஒன்றும், மூளைக்கோளாறு உள்ளவர்களின் புனருத்தாரணத்திற்கு வேண்டிய ஆசிரியர்கள், தாதிககூகள், சமூக ஊழியர்கள் பயிற்சி நிலையம் ஒன்றும் தமிழ் நாட்டில் ஆரம்பிககப்படவிருக்கின்றன.

ஜவுளி விநியோகம்

### 30 பேரின் பதிவு ரத்து

கோட்டை, செவ்

முப்பது ஜவுளி விநியோகஸ்தர்களின் பதிவை சலுசல இன்றுடன் ரத்துச் செய்துவிட்டது. இவர்கள் தவறுக நடந்து கொண்டதினுலேயே இவர்களுடைய பதிவு ரத்துச் செய்யப்பட்டதென லங்கா சலுசலவின் தலைவர் திரு. டக்ளஸ் பெரேரா தெரிவித்தார்.

பிறநிக் குழு ஆராயும்.

— —

### கிரி நன்கொடை

புதுடில்லி, ஜுலை 14

அமரர் லால்பகதூர்சாஸ்திரி டிரஸ்டி நிதிக்கு குடியரசுத்தலைவர் திரு. வி. வி கிரி 3000 ரூபாய் வழங்கினார்.

— —

### வேலைநிறுத்தம் முடியும்

கல்கத்தா, ஜுலை.14

சென்ற 13 நாட்களாக வேலைநிறுத்தம் செய்து வந்த 18,000 கல்கத்தா துறைமுகத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் நாளை முடிவடையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

— —

### பிறந்தநாளில் இட்லி வெட்டு!

சென்னை, ஜுலை 14

பிறந்தநாள் கொண்டாடுவது மேல்நாட்டு மரபை ஒட்டிய பழக்கமாயிருப்பதால் அம்மரபுக்கேற்ப 'கேக்கை' வெட்டுவது தவறில்லை என்றாலும் தமிழ் நாட்டின் தனிச்சிறப்பாகிய இட்லியை வெட்டுவது நமது பண்பாட்டிற்கு ஏற்றதாகும்''

இவ்வாறு தமிழ் நாடு கல்விஅமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் தமது 51-வது பிறந்ததினத்தை கொண்டாடியபோது பத்திரிகை நிருபர்களுடன் பேசுகையில் தெரிவித்தார்.

— —

### நான்கு மொழித்திட்டம்

சென்னை, ஜுலை 14

சென்னையிலுள்ள 122மத்திய பள்ளிகளில் நடப்பு கல்விஆண்டுமுதல் 4மொழித் திட்டம் கற்பிக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை சென்னைக்கு விஜயம் செய்துள்ள மத்திய கல்வி இலாகா துணை அமைச்சர் திரு. பக்ததர்ஷன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: இதுவரை இப்பள்ளிகளில் ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் பயிற்றுவிக்கப்பட்டுவந்தன. தற்போது வட்டார மொழி ஒன்றும் கற்பிக்கப்படவிருக்கிறது. 4 மொழிகளைக் கற்பது குழந்தைகளுக்குத் தொல்லையாக இருக்காது என்றும், ருமேனியா போன்ற நாடுகளில் பள்ளிக் குழந்தைகள் 5 மொழிகளைக் கற்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

வீதி உலாவும் நிகழும்.

— —

### 'காணி' உறுதி யாருடையது?

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கார்ச்சாரதியான க. இராசரத்தினம் என்பவரால் 'காணி' உறுதி ஒன்று கண்டெடுக்கப்பட்டுஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

— —

### சுயபாஷையில் நடத்துவதில் மாற்றமில்லை

கோட்டை, செவ்வாய்

ஒக்டோபர் 1ம் திகதியிலிருந்து பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான பாடங்களை சுயபாஷையில் கற்பிக்கவேண்டுமென்ற தனது முடிவை எவ்வகையிலும் மாற்றப்போவதில்லை என கல்வி அமைச்சர் திரு.பதியுதீன் முகமத் தெரிவித்தார்.

இவ்விஷயமாகப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைச்சரைக் கண்டு, விஞ்ஞான பாடங்களை சுயபாஷையில் நடத்துவதிலுள்ள கஷ்டத்தை எடுத்துச் சொன்னார்கள். கொழும்புபல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் பி. ஏ. அபயவிக்கிரமாவும் அமைச்சரைக்கண்டு, விஞ்ஞான பாடங்களை சிங்களத்திலும் தமிழிலும் நடத்துவதற்குரிய பாட நூல்கள் இல்லை எனக் கூறினார்.

சுய பாஷையில் படித்தவர்களுக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்தை அம்மொழியிலேயே கற்பிப்பதற்கு மறுப்பது சரியல்லவென்றும் பல்கலைக் கழகங்களில் சுய பாஷையில் விஞ்ஞானத்தைக் கற்பித்தலை நடைமுறைப் படுத்தற்கு வேண்டிய அவகாசம் இவர்களுக்கு அளிக்கப்பட்டது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### 'இலவச டிக்கட் பெறக்கூடாது'

கோட்டை, செவாய்

திரைப்படங்களுக்காக அளிக்கப்படும் இலவச அல்லது சலுகைக்கட்டண டிக்கட்டுக்களை விரைவில் நியமிக்கப்படவிருக்கும் தணிக்கைச் சபையினர் பெற்றுக்கொள்ளக் கூடாதென கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகா கேட்டுள்ளார்.

அது வரையும் இச் சபையில் 27 அங்கத்தவர்களே இருந்தனர் இவ்வெண்ணிக்கையை அமைச்சர் ஐம்பதாகக் கூட்ட விருக்கிறார்

பிதா ரி. ஏ. ஜே. மதுரநாயகமும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப்பும் கலந்துகொள்கின்றனர்.

ரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருந்த இரு வழக்குகள் ஒத்திப் போடப்பட்டன. அசைஸ் விசாரணை இன்று காலை நடைபெறும்.

நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.


# தலைவலி, நோவுகளைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




# டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

தலைவலி, நோவுகளுக்கான மருந்துகள் அதிதுரித நிவாரணம் தர வேண்டும். டிஸ்பிரின், கரையக் கூடிய அஸ்பிரின் கொண்டதாகையால் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது.

எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்

டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், மற்ற மருந்துகள் போல உடம்புக்குப் பாதகமான கரையாத துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதகமான சேர்பொருள்கள் எதுவும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது டிஸ்பிரின்

உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள், அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அதி சிறந்த வலி நிவாரணிகளில் ஒன்று டிஸ்பிரின் என்பது அவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரித நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அண்ட் கோல்மன் தயாரிப்பு

P-9498


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கோபம் கொடியது. அது முகத்தின் அழகையே கெடுத்து விடுகிறது. சாந்தம் முகத்திற்கு அழகு தருகிறது. ஆகவே கோபத்திற்கு இடம் அளிக்கக் கூடாது.

—ராஜாஜி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 31-ந் திகதி (15-7-70)


## ஒரு முடிவு வேண்டும்

அரசாங்க ஊழியர்களுக்கு - ஒரு சில துறையைச் சேர்ந்தவர்களைவிட — அரசியல் உரிமை அளிக்கப்படுமென்று கூட்டணியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தனர். இந்த வாக்குறுதியை கூட்டணி அரசாங்கம் தமது முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலும் ஊர்ஜிதப்படுத்தியிருந்தது இதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர்கள் பலரும் அறிவித்து வருகின்றனர்

இதேசமயம் பழிவாங்கும் நோக்கத்துடன் அரசாங்க ஊழியரின் இடமாற்றம் நடைபெறமாட்டாதென்றும் அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் அரசியல் காரணங்களுக்காகப் பழிவாங்கப்படமாட்டார்களென்றும் பிரதமர் உட்பட அமைச்சர்கள் பலரும் உறுதி கூறி வருகின்றனர், ஆனாலும் அரசியலில் ஈடுபட்டதற்காக அரசாங்க சேவையிலுள்ளவர்கள் பலர் பழிவாங்கப்படுகின்றனரென்றும் இதிலும் கட்சி அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதாகவும் புகார் கூறப்படுகின்றது. இதுபற்றி பிரதமருக்கோ பொறுப்புள்ள அமைச்சர்களுக்கோ தெரியாமலிருக்கலாம். இவை பற்றி பிரதமரும் அமைச்சர்களும் அதிக கவனம் செலுத்தவேண்டியது அவசியம்

1966-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி தமிழ்மொழிச் சட்ட விசேஷ விதிகள் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து அரசாங்க ஊழியர்கள் பலர் வேலைநிறுத்தம் செய்தனர்; ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடத்தினர். அரசாங்க ஊழியரின் இந்த நடவடிக்கைக்காக பல ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது; சிலர் வேலையில் இருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டனர்; மற்றும் சிலர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

தொழிற்சங்க நடவடிக்கை மட்டுமல்ல அரசியல், தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக முன்னைய அரசாங்கத்தினால் பழிவாங்கப்பட்டவர்கள் என்றமுறையில் பலருக்கு இன்றைய அரசாங்கம் நிவாரணம் வழங்கியிருக்கிறது. இது வரவேற்கக்கூடியதும் பாராட்ட வேண்டியதுமாகும்.

இதேசமயம் தொழிற்சங்க நடவடிக்கையாகத் தமிழ் அரசாங்க ஊழியர்களைச் சிங்களம் படிக்கக்கூடாது என்று தடுத்தது அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இதுவும் ஒரு தொழிற்சங்க நடவடிக்கையேயென்றும் இதனால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்றும் எழுதுவினைஞர்சங்கம்விடுத்த கோரிக்கை மீது அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை

முன்னைய அரசாங்கம் தவறுசெய்துவிட்டது என்று பல விஷயங்களையும் எடுத்துக்காட்டும் இன்றைய அரசாங்க அமைச்சர்கள் அதே தவறுகளைச் செய்யக்கூடாதென்பதே மக்கள் கவலை.

தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி யடைந்தவர்களுக்கு உயர்பதவிகளை அளித்தது என்று முன்னைய அரசாங்கத்தின் மீது முன்னர் எதிர்க்கட்சியிலிருந்த இன்றைய ஆட்சியாளர் குறை கூறினர். தமது கட்சியினருக்கும் உறவினருக்கும் உயர்பதவி அளித்ததாகவும் அவர்களுக்குச் சலுகை செய்ததாகவும் முன்னர் இவர்களே புகார்செய்தனர். சிலர் மீது பழிவாங்குவதாகவும் இவர்கள்தான் சொன்னார்கள். இந்த நோக்கத்துடன்தான் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டதாகவும் கூறினார்கள்.

இதேநிலைதான் இன்றைய மக்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னும் நீடிக்கிறது என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். இதற்கு இடம்கொடுப்பது நல்லதல்ல.

மக்கள் அரசாங்கம் மக்க

## செனட்டில் நீதியமைச்சருக்கு 'திரு' பதில் - 9

# "தமிழ்ப்பகுதி நீதிமன்றங்களில் சிங்களத்தில் அலுவலா; இது நீதியா?

1824-ம் ஆண்டு கோல்புறூக் கமிஷனின் அறிக்கை இலங்கையில் 3 மொழிகளிலும் வெளியிடப்பட்டது. நாம் இப்பொழுது உரையாற்றிக்கொண்டிருக்கிற ஆகஸ்ட் சபையை அமைப்பதற்கு முதல் தடவையாக நடவடிக்கை அப்போதுதான் எடுக்கப்பட்டது. காலனி அமைப்பின் கீழ் முதலாவது அமைந்த சட்டசபை இதுவேயாகும். கோல்புறூக் கமிஷனின்பின்னர் சட்டசபை அமைக்கப்பட்டது. இச்சபையிலேயே எமது முன்னோர்கள் தமிழர்களும் சிங்களவர்களும் அமைதியாக ஒருவருக்கொருவர் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். எதிர்த்தனர். ஆதரித்தனர்.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இங்கு உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மாஜிஸ்திரேட் நீதிமன்றம், கிராமநீதிமன்றம் ஆகியன இருந்தன. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் கிராமக்கோடுகளில் சிங்களப்பகுதிகளில் சிங்களத்திலும், தமிழ்ப் பகுதிகளில் தமிழிலும் அலுவல்கள் நடந்தன. இச்சட்டம் என்ன கூறுகிறது? 1961-ம்ஆண்டு நீதிமன்ற மொழிச் சட்டத்தின் 3 வது சரத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(1) "ஒரு நீதிபதி சிங்களத்திலுள்ள விசாரணைகளோ வழக்குச் சம்பந்தமான அறிக்கைகளையோ வாசிக்க இயலாவிடின் அவர் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட அரசாங்க மொழி பெயர்ப்பாளரைக் கொண்டு அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அறிந்துகொள்ளலாம்.

(2) 'நீதிபதி' என்பது உயர்நீதிமன்ற நீதிபதி, அசைஸ் கமிஷனர், மாவட்ட நீதிபதி, மாஜிஸ்திரேட் அல்லது கிராமக்கோட்டுத் தலைவர் ஆகியோரைக் கருதுகிறது

இந்த நாட்டின் புத்தியுள்ள, நியாயமுள்ள ஒருவர், இந்நாட்டின் ஒரு அமைச்சர் பருத்தித்துறை அல்லது எனது கிராமமாகிய வட்டுக்கோட்டையின் — கிராம விசாரணை மன்றம் போன்ற இடத்தில் வழக்காடுபவர் வழக்கறிஞரின் உதவியுமில்லாது அங்கு சிங்களத்தில் சகல அலுவல்களையும் கவனிக்கமுடியுமா? அறிவுள்ள எந்த ஒரு மனிதனாலும் இத்தகைய இடங்களில் சிங்களத்தில் நடைபெறவேண்டுமெனக் கருத முடியுமா? இது பைத்தியக்காரத்தனம் என நான் கூறுகிறேன். இது நடைபெறவும் முடியாது நடைபெற வேண்டுமெனக் கருதவும் கூடாது.

எனவே எனது மதிப்புக்குரிய நண்பரையும் அரசாங்கத்தையும் சிங்கள மக்களையும் இங்குள்ள சகலரையும் எங்களை நீங்கள் கைப்பற்றிய ஒரு இனத்தவரை நடாத்துவதுபோல் நடாத்தாதீர்கள். ஏகாதிபத்தியத்தின் கொடூரமான தன்மையைக் காட்டாதீர்கள் என நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் சிறுபான்மையினராகவிருந்தாலும் எதிர்ப்பதற்கு எங்களுக்கு உரிமையிருக்கிறது. எங்களுக்கு சுதந்திர மனித உரிமைகள் சில உண்டு. கிராமக்கோடுகளில் நீங்கள் இதைக் கொண்டுவருவீர்களானால் அங்குள்ள ஒழுங்குமுறை அறவே ஒழிந்துபோகும். எனது மதிப்புக்குரிய நண்பரின் கருத்தற்ற விரோதமான செயல்முறையை, அதில் உள்ள அநீதியை, துரோகத்தை, செயல்படுத்த முடியாத தன்மையை எடுத்துக்காட்டவே நான் கிராமக் கோடுகளை உதாரணமாக எடுத்துக்கூறினேன். இதை அவர் உணரவேண்டும்.

மதிப்புக்குரிய அமைச்சர் இந்த அரசியல் அரங்கில் புதியவர். மக்கள் அரசாங்கம் என்று அழைக்கப்படும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தலைவர்களால் இந்த விவகாரங்கள் ஆராயப்பட்டது பல சந்தர்ப்பங்களில் ... அவர்கள் எங்களுக்கு ... தும் எங்களது நோக்கமாக இருக்கவில்லை. எங்களது

அங்குள்ள நீதிமன்றத்துக்கு ஒரு தமிழன் சென்றால் அங்கு அவன் தனது முறைப்பாடுகளை தமிழில் அளிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் எனது மதிப்புக்குரிய நண்பர்போன்று நல்ல வழக்கறிஞர்களை ஆஜர்படுத்த எல்லோருக்கும் வசதியிருக்காது. அவன் தனது முறைப்பாடுகளை தானே கொடுக்கவேண்டி நேரிடும். ஆதலால் அவற்றையெல்லாம் தமிழில் கவனிக்க வசதிசெய்து தரல்வேண்டும். இவைகளே அடிப்படையுரிமைகளாகும் இதேயுரிமைகள் சிங்களவருக்கும் இருக்க வேண்டும். ஏகாதிபத்தியத் தன்மை இருக்கக்கூடாது. திரு. டட்லி சேனநாயக்கா கூட நான் ஆச்சரியப்படும் அளவுக்கு அதிகம் மாறியுள்ளார் என்றே கூறவேண்டும், தமிழ்மொழி (விசேஷ உபயோக) விதிகளைக்கொண்டு வருவதற்கு அவர் அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு நாம் அவரை மாற்றக்கூடியதாகவிருந்தது. சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாகவேண்டும் என்ற பிரேரணை விவாதிக்கப்பட்டபோது அவர் 'ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்ட நீங்கள் சிங்களத்தையும் தமிழையும் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?" எனக்கூறினார் இதற்கு மறுமொழி இதுவேயாகும்— நாங்கள் அப்போது கைப்பற்றப்பட்ட மக்கள் இப்போது சுதந்திரமடைந்த மக்கள். சம அந்தஸ்துடைய மக்கள் ஆகவே சகோதரர்போன்று சகபிரஜைகள்போன்று எங்கள் சார்பில் நியாயமாகவும் நீதியாகவும் இருங்கள்.

(தொடரும்)

## 'உலகுக்கு நல்லோசை கொடுப்பவர் பெண்கள்'

### — பண்ணிசைப்புலவர்

உரும்பராய், செவ்

"ஞானசம்பந்தர் திருவோலக்காவில் பொற்றாளம் பெற்றார். பொற்றாளத்துக்கு ஓசையூட்டியவர் அங்கு எழுந்தருளியுள்ள உமையம்மையார் அவருக்கு ஓசை கொடுத்த உமையம்மையார் என்றதிருப்பெயரே தற்போது அங்கு வழங்குகிறது உலகுக்கெல்லாம் நல்ல ஓசை கொடுக்கிறவர்கள் பெண்கள்". என உரும்பராய் தேவாரப்பாடசாலையில் நடைபெற்ற தேவாரப் பண்ணிசைக் கச்சேரியில் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன ஓதுவார் மூர்த்தி பண்ணிசைப்புலவர் திரு. பீ. ஏ. எஸ். இராஜசேகரன் தெரிவித்தார்.

பண்ணிசைக் கச்சேரிக்குத் தலைமை தாங்கிப் பேசிய பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைக் காரியதரிசி திரு. பஞ்சாட்சரம்பேசுகையில் 'வேதசாரமே தேவாரம், தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளையும் 1873-ல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் திருவாவடுதுறையிலிருந்து பண்பாடுவதில் வல்லஓதுவார்களை அழைத்து தாமும் சேர்ந்து நல்லூர்க்கந்தசுவாமிகோவிலில் ஓதுவித்தார், இப்பொழுது இலங்கை இந்து ஆலோசனைச் சபை தமிழகத்தில் பிரபல ஓதுவாராக விளங்கும் திரு. இராசசேகரனை இவ்விடம் அழைத்து பல இடங்களில் தேவார வகுப்புக்களை ஒழுங்கு செய்து திருமுறை ஓதுவதில் ஈழத்தமிழர்கள் மத்தியில் நல்ல பயிற்சி ஏற்பட ஒழுங்கு செய்தமை பாராட்டக்கூடியது என்று தெரிவித்தார்.

திருமுறைத்தமிழ் தெய்வத்தமிழ் தெய்வத்தமிழான திருமுறைகளைப் பக்தியுடன் ஓதுதல்வேண்டும் அவ்வாறு ஓதுபவர்களே மெய்யடியார்

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

# செய்திச் சுருக்கம்

### ஆயுர்வேத வைத்தியப்பரீட்சை

இம்மாதம் 17-ம் திகதி நடைபெறவிருக்கும் ஆயுர்வேத வைத்தியப் பரீட்சைக்கான பிரவேசகார்ட் நேரசூசிகைகள் யாவும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

### கொக்கோ விருத்திசெய்யயோசனை

பல்லேகலைத் தோட்டத்தில் கொக்கோப் பயிரை விருத்தி செய்வதற்குகுண்டசாலை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு யு. பி. வை, ஜினதாஸ நடவடிக்கை எடுத்து வருகிறார்.

0 0 0

### தேங்காய்விலையில் வீழ்ச்சி

சிலாபப் பகுதியில் தேங்காய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனராம். மேலும் விலையில் வீழ்ச்சி ஏற்படாதவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இவர்கள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

0 0 0

### செய்முறைப் பரீட்சை

வைத்தியத்துறையில்சேர அனுமதி கோரும் 300 ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான ஓர்கனிக் கெமிஸ்ரி செயல்முறைப் பரீட்சை இம்மாதம் 26, 27-ம் திகதிகளில் கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் நடைபெறும்.

0 0 0

### ஏழு நீதியரசர்கள் விசாரிப்பர்

தேர்தல் ஆட்சேப மனுக்களை விசாரிப்பதற்கென ஏழு நீதியரசர்களைப் பிரதம நீதியரசர் திரு எச், என், ஜி. பெர்னாண்டோ நியமித்துள்ளார். கண்டி தேர்தல் ஆட்சேப மனுவை நீதியரசர் அலஸ், டெடிகம தேர்தல் ஆட்சேப மனுவை நீதியரசர் சமரவிக்கிரம, நிந்தவூர் பட்டிருப்பு தேர்தல் ஆட்சேப மனுக்களை நீதியரசர் வீரமந்திரி, இரத்தினபுரி, நுரளை தேர்தல் ஆட்சேப மனுக்களை நீதியரசர் கிரெஸ்டர், நீர்கொழும்பு தேர்தல் ஆட்சேபமனு

யைச் சேர்ந்த திரு. திஸ தேவேந்திரா மாத்தறை அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### கையளிக்கும்

வீட்டு வாடகைக் கமிட்டியின் அறிக்கை இம்மாதம் 21-ந் திகதி வீடமைப்பு அமைச்சர் திரு பீட்டர் கெனமனிடம் கையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

### வேலை இல்லை

இளைஞர்களுக்கு வேலை வசதியளிக்கும் பொருட்டு பொலிஸ் பகுதியிலிருந்து ஓய்வுபெறும் பொலிஸாரை எந்த அரசாங்க ஸ்தாபனத்திலோ கூட்டுத்தாபனங்களிலோ அமர்த்தக்கூடாதென்று பிரதமர் திருமதி பண்டாரநாயகா உத்தரவிட்டுள்ளார்.

### தணிக்கை சபையில் 3 பெண்கள்

கலாச்சார அமைச்சர் தணிக்கை சபைக்கு 32 அங்கத்தவர்களை நியமித்துள்ளார். திருமதி எம். முத்துத்தம்பி, திருமதி எம். கார்த்திகேசன், திருமதி ஆர். ரத்னவேல் ஆகிய மூன்று பெண்களும் இக்கமிட்டியில் இடம்பெற்றுள்ளனர்,

0 0 0

வவனிக்குளம் 2-ம் யூனிற் அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டுவிழா இன்று பிற்பகல் திரு. சி. சுப்பையா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

— —

66-ம் ஆண்டு சம்பவம்

## கடற்படை அதிகாரிகள்மீது விசாரணை

கோட்டை, செவ்வாய்

1966-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி இரவு மூன்று கடற்படை அதிகாரிகள், தரட் ரோட்டிலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வீட்டுக்குச் சென்று கைத்துப்பாக்கி காட்டி தகாத வார்த்தைகள் பேசியதுபற்றி ஒரு பூர்வாங்க விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிசாரின் உதவியோடு கடற்படையினர் கொள்ளுப்பிட்டியில் ஒரு பிக்குவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது; சிலர் வேலையில் இருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டனர்; மற்றும் சிலர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்துக்காக தண்டிக்கப்பட்டார்கள் என்ற முறையில் அவர்களுக்கு கூட்டணி அரசாங்கம் மீண்டும் வேலை வழங்கியிருக்கிறது. இது

இதேநிலைதான் இன்றைய மக்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னும் நீடிக்கிறது என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். இதற்கு இடம்கொடுப்பது நல்லதல்ல.

மக்கள் அரசாங்கம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. அந்த நம்பிக்கையை இழக்கக்கூடியமுறையில் நடந்துகொள்ளக்கூடாதென்பதையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## இன்று நினைவு தினம்

# தனித் தமிழ் வளர்த்த மறைமலை அடிகள்

— வளவன் —

எழுத்திலும் பேச்சிலும் தமிழ்! தனித்தமிழ்!! பிறமொழிச் சொற்கள் கலவாமல் பேசவேண்டும் எழுதவேண்டும் என்ற எழுச்சிக் குரல் தனித்தமிழ்க் குரல் எங்கும் கேட்கிறதுஇன்று.

தமிழால்முடியும், எக்காரியத்தையும் தனித்தமிழால் செய்யமுடியும் எனத் தமிழறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஏற்க மறுப்பவர்கள் தமிழ் நன்கு தெரியாதவர்கள். அரைகுறையாகத் தமிழ் படித்தவர்களும் அரைகுறை ஆங்கிலம் படித்தவர்களுமே அது முடியாது என்கிறார்கள், இவர்கள் பேசுகின்ற ஒரு தமிழ் வாக்கியத்திலே நான்கு ஆங்கிலச் சொற்களும் இரண்டு வடமொழிச் சொற்களும் கலந்திருக்கும் தமிழ் கலவாமல் ஆங்கிலம் பேசவும் தெரியாதவர்கள் இவர்கள்.

இந்த நிலைமாறி தனித்தமிழ் வளர்க்க உழைத்தவர் மறைமலை அடிகள், தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படு மறைமலை அடிகளின் இயற்பெயர் வேதாசலம். சுவாமி வேதாசலம் என அழைக்கப்பட்ட இத் தமிழ் அறிஞர் தம் பெயரை மறைமலை அடிகள் என்று தமிழாக்கிக் கொண்டார்.

கன்னித்தமிழ் இயக்கம் தோன்றத் துணையாகவிருந்தவர் சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்களாவர். அவர் தம் பெயரை பரிதிமால் கலைஞர் என மாற்றிக் கொண்டார். இந்த இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட வடமொழிப் பெயர் பெற்றவர்கள் பலர் தம் பெயர்களை தமிழில் மாற்றிக் கொண்டனர். எடுத்துக் காட்டுகள் சில வருமாறு:

கனகசுந்தரி- பொன்னழகி லட்சுமி- திருமகள், சரஸ்வதி- நாமகள், சோமசுந்தரன் மதியழகன், கலியாணசுந்தரம் - மணவழகன், பாலசுந்தரம் -இளவழகன், பாலசுப்பிரமணியம் - இளமுருகன், பாலேந்திரன் - இளங்கோ, கனகசபாபதி- பொன்னம்பலவாணர்.

தமிழில் கலந்துறவாடும் வடமொழிச் சொற்களுக்குப் பதிலாக சிறந்த தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்து இன்று நாம் கையாளுகின்றோம் எனின் மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம் தான் அதற்குக் காரணமாகும்.

சிரசு-தலை, சரீரம்-உடல், ஜலம்-நீர், அக்கிராசனர்- தலைவர், பொக்கிஷாளர்- பொருளாளர், புஜம்- தோள், சங்கீதம்- இசை, சாதம்-சோறு, காரியதரிசி- செயலாளர். இப்படியான பல தமிழ்ச் சொற்களை, நாம் இன்று கையாளுகின்றோம்.

அடிகளார் 15-7-1876ம் ஆண்டிலே தோன்றி 15-9-1950ம் மறைந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் மூன்றிலும், புலமை பெற்றவர். சென்னைகிறிஸ்தவக் கல்லூரியில் 15 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். ஆய்வு, கட்டுரை, நாவல், நாடகம் என்னும் பல துறை நூல்களையும் ஆக்கியவர். 1937ல் தென்னகத்தில் திணிக்கப்பட்ட இந்தியை எதிர்த்துப் போராடியவர் சமூக ஏற்றத் தாழ்வுகளையும், மூட நம்பிக்கையையும் ஒழிக்கப் பாடுபட்டவர். பெண் சமத்துவம் பேணியவர். கோவில்களில், தமிழில் வழிபாடு செய்ய வழியமைத்தவர்.

எனவேதான், எல்லோரும் ஏற்கும் வண்ணம் தனித் தமிழ் சொற்களை இன்று நடைமுறையில் கொண்டு வளர்த்து வருகிறோம்.

தமிழனுக்கு ஒரு தனிப் பண்புண்டு, மொழியுண்டு' என்பதை நிலைநாட்டப் பிறந்து, உழைத்து, மறைந்த மறைமலையடிகளை நினைவில்கொண்டு போற்றிப் பெருமைகொள்வோம்.

தலைவர் ஆகியோரைக் கருதுகிறது.

இந்த நாட்டின் புத்தியுள்ள, நியாயமுள்ள ஒரு

## இன்றைய பலன்

ஆனி மாதம்31-ம் திகதி [15-7-70]

மேஷம்- பகைமூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். சிறியவிடயத்திற்குக்கூட குறைகேட்கநேரிடும்.

ரிஷபம்- காதல் சிட்டுகளுக்கு இன்று கனகுஷியான தினம். மறைமுக எதிர்ப்பு இன்று தானகவே மடிந்துபோகும்.

மிதுனம்- முயற்சியால் முட்டுக்கட்டை தென்படும் மற்றவரிடம் குறைகேட்க நேரிடும்.

கடகம்- குருவின் ஆசியுடன் குறிக்கோளில்வெற்றி காண்பதற்கு இடமுண்டு. நேர்முகப்பரீட்சை வெற்றியைத் தேடித்தரலாம்.

சிங்கம்- இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

கன்னி- வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும்.

துலாம்- சிந்தனைகளின் தாக்குதல்கள் உங்கள் உடல்நிலையைப் பாதிக்கும் மனதில் அமைதி குன்றும்.

விருட்சிகம்- தேனுகஇனித்தது இன்று வேம்பாக கசக்கும். மனப்போராட்டத்துக்கும் இடமுண்டு.

தனு- பரந்த மனப்பான்மையுடன் செயலாற்றுவீர்கள். பொதுப்பணிகளில் அதிக ஈடுபாடு ஏற்படும்.

மகரம்- பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில்துறையிலும் பின்தங்கநேரிடும்.

கும்பம்- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

மீனம்- எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும். உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத்திறமையில் முதலிடம் பெறுவார்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தலைவர்களால்இந்த விவகாரங்கள் ஆராயப்பட்டது பல சந்தர்ப்பங்களில் அவர்கள் எங்களுக்கு ஒருபொழுதும் எங்களது நோக்கமாக இருந்ததல்ல, எங்களது நோக்கமுமல்ல, இது எங்களது நோக்கமாக விருக்கவும் முடியாது தமிழ் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் அலுவல்களைச் சிங்களத்தில் கவனிப்பது நியாயமானதல்ல'' என உறுதியளித்துள்ளார்கள் ஆகவே தயவுசெய்து நியாயமாக, நீதியாக நடந்து எங்களது பிரதானமான உரிமைகளைத் தாருங்கள். நாம் ஒருஐக்கியமான, ஒன்றுபட்ட நாட்டை உருவாக்குவோம்.

தமிழ் பேசும் பகுதிகள் எவை என ஒரு கேள்வி முன்னர் கேட்கப்பட்டது? வடக்கு கிழக்கு மாகாணங்களையே நாம் கருதுகிறோம் தமிழ்மொழி (விசேஷ உபயோக) சட்டத்தில் வடக்கும், கிழக்கும் தமிழ்ப் பேசும் பகுதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தில் வடக்கும் கிழக்கும் தமிழ்பேசும் பிரதேசங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே தமிழ் பேசும் பகுதிகள் என நாம் கூறுவது வடக்கு கிழக்கு மாகாணங்களையேயாகும்.

ஒரு அடிப்படைக்கருத்தை நான் கூறுகிறேன் அடிப்படைச் சமத்துவம் என்னவெனில் இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் அரசாங்கத்தோடு தனதுமொழியில் தொடர்புகொள்ளும் உரிமை இருக்கவேண்டும். செனட்டர் நடேசன் கூறியதுபோன்று மாந்தையிலோ அம்பாந்தோட்டையிலோ உள்ள அதிகாரிகளுக்குத் தமிழ்தெரியவேண்டுமென நீங்கள் எதிர்பார்க்க முடியாது. வழிதவறி அங்கு ஒரு தமிழன் அவதிப்பட்டால் அவனுக்கு மொழிபெயர்ப்பாளன் வசதியளித்து அவனது விவகாரங்களை உங்களுடன் தமிழில் கவனிக்கச் செய்யுங்கள். ஆனல் சில அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவிடயங்கள் உள்ளன. ஒரு தமிழன் அம்பாந்தோட்டையில் விவாகம் செய்தால் அவனது விவாகப் பதிவைத் தமிழில் பதிய நீங்கள் வசதிசெய்து கொடுக்கவேண்டும். அம்பாந்தோட்டையில் ஒரு தமிழன் மரணமானல் அவனது மரணப் பதிவைத் தமிழில் பதிவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

— நமது நிருபர் —

பச்சிலைப்பள்ளி. செவ் கிழைக்கரை அபிவிருத்தி முன்னணியின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இணைப்பாளர்: பி. அ. செலஸ்ரீன்ராசா. பொதுத் தொடர்வாளர்: அ. தார்ச்சியஸ், பொருளாளர்: கொ. அ. ஸ்ரனிஸ்லோஸ், கடற்றொழில் குழு: வெ. இராசநாயகம், பா. யோசேப்பு, சி. சந்தனப்பிள்ளை, கமத்தொழில்குழு: தி. சந்திரசேகரம், வே. ஆறுமுகசாமி, செ. பத்மநாதன் கைத்தொழில் கலாச்சாரக் குழு: தொ. செபமாலை, க. துரைசிங்கம், கி எட்பேட்.

0 0 0

### காணிக்கச்சேரி

நாகர்கோவில் கிராமத்தில் குடியிருக்க வசதியற்றவர்களுக்கு காணி வழங்குமுகமாக காணிக்கச்சேரியொன்று வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்துவால் நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்டது

0 0 0

### அனுமதி கிடைத்தது

நாகர்கோவில் பகுதியில் மண் ஏற்ற அனுமதிப்பத்திரம் வழங்குமாறு வடமராட்சி வடக்கு, கிழக்கு காரியாதிகாரியை நாகர்கோவில் கிராமசேவையாளர் கேட்டதற்கிணங்க அனுமதிப்பத்திரம் வழங்க காரியாதிகாரி சம்மதித்துள்ளாரென்றும் இனிமேல் உத்தரவுப்பத்திரம் பெற்று நாகர்கோவில் மண் ஏற்றலாமெனவும் அறியக்கிடக்கிறது.

0 0 0

### மகாநாடு

இந்திய இலங்கைத்தேசங்களிலே உள்ள குருமாரின் பயிற்சிமன்றத் தலைவர்கள் இந்தியாவில் ஒன்றுகூடி தற்கால மாற்றங்களுக்குத்தக்க கல்வியைக் குருமார் பயிற்சிக்கல்லூரிகளில் எவ்வாறு ஏற்படுத்தலாம் என இருவாரங்களாக ஆலோசித்தனர். இம்மகாநாட்டில் 37 குருமார் பங்குபற்றினர். இலங்கையின் சார்பில் அமலோற்பவ தியாகிகளின் சபையைச் சேர்ந்த வண. மைக்கேல் குருஸ் சுவாமிகள் வண. பிலிப் திலநாயக்க சுவாமிகள் ஆகியோர் பங்கு பற்றினர்.

கூடியது என்று தெரிவித்தார்.

திருமுறைத்தமிழ் தெய்வத்தமிழ் தெய்வத்தமிழான திருமுறைகளைப் பக்தியுடன் ஓதுதல்வேண்டும் அவ்வாறு ஓதுபவர்களே மெய்யடியார்களான ஓதுவார்கள்'' என டாக்டர் க. சிவஞானரத்தினம் பேசுகையில் கூறினர்.

செல்வன் மா. தங்கராசாவினதும், திரு. வீ. ரி வி. சுப்பிரமணியத்தின் பண்ணிசைக்கச்சேரியும் இடம் பெற்றது.

......

## இறுதி யாத்திரை

யாழ்ப்பாணம், புதன்

கொடிகாமத்தில் கொலையுண்ட கச்சாய் கிராமசபை முன்னள் உபதலைவர் ஆறுமுகம் கனகரத்தினத்தின் பிரேதஊர்வலத்தில் நேற்று மாலை ஆட்சிமன்ற உறுப்பினர், டாக்டர்கள், வழக்கறிஞர்கள் உட்பட நூற்றுக்கணக்கானேர் கலந்து கொண்டனர். கொடிகாமம் அரசினர் பாடசாலை மாணவர்கள் நேற்று தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர்கள்.

கொடிகாமம்சந்தை, பஸ் நிலையம் பாடசாலை, கடைகள், வீடுகள்தோறும் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. கடைகள் அரைநேரம் பூட்டப்பட்டன.

கொடிகாமம் அரசினர் பாடசாலை மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். இறந்தவரின் இல்லத்திலிருந்து மயான றேட்டுவரை இருகரையிலும் தோறணங்கள் கட்டப்பட்டிருந்தன.

... ...

## நல்லைக்கந்தன் திருவிழா

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 7-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. உற்சவம் தொடர்ந்து 26 நாட்கள் நடைபெறும் முக்கிய உற்சவங்கள்வருமாறு: 7-ம் திகதி பகல் 12 மணி கொடியேற்றம் 10-ம் திருவிழா: 16-ம் திகதி இரவு மஞ்சம். 17-ம் திருவிழா: 23-ம் திகதி இரவு கார்த்திகை உற்சவம், 16-ம் திருவிழா 25-ம் திகதி இரவு கைலாசவாகனம் 22-ம் திருவிழா: 28-ம் திகதி இரவு தெண்டாயுதபாணி உற்சவம் 23-ம் திருவிழா 29-ம் திகதி இரவு சப்பறம். 24-ம் திருவிழா 30-ம் திகதி காலை 7 மணிக்கு ரதோற்சவம் 25-ம் திருவிழா: 31-ம் திகதி தீர்த்தவிழா, அடுத்தநாளான 1-9-70 இரவு நிகழும் பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.

லூர் பட்டிருப்பு தேர்தல் ஆட்சேப மனுக்களை நீதியரசர் வீரமந்திரி, இரத்தினபுரி, நுரலை தேர்தல் ஆட்சேப மனுக்களை நீதியரசர் கிரெஸ்டர், நீர்கொழும்பு தேர்தல் ஆட்சேபமனுவைநீதியரசர் வைத்தியதிலகா, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் தேர்தல்ஆட்சேப மனுக்களை நீதியரசர் தாமோதரம் ஆகியோர் விசாரிப்பார்கள். பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப மனுவை விசாரிக்க நீதியரசர் நியமிக்கப்படவில்லை.

0 0 0

### என். பி. ரி. ஏ. பரீட்சை

வடமாகாண ஆசிரியர்சங்கத்தினரால் நடாத்தப்படும் 8-ந் தரப் பரீட்சையைநவம்பர் மாதம் 16-ந் திகதி தொடக்கம் 20-ந் திகதி வரை நடாத்துவதென ஆசிரியர் சங்க பரீட்சைக் குழு தீர்மானித்திருக்கிறது.

### அமைச்சர் ரத்நாயகா

ஆட்சிமன்ற விவகார அமைச்சா திரு பி. கே. ரத்நாயகா வருடாந்த சாம்ராஜ்ய ஆட்சிமன்ற மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன்னதாக லண்டனிலுள்ள பௌத்த விகாரைக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்வார்.

### அனில் தகவல்

இ. போ. ச. வருடா வருடம் எண்பது லட்சம் ரூபாவை இலங்கை டயர்க் கூட்டுத்தாபனத்திற்கு ரயர்கள் வாங்குவதற்காகக் கொடுக்கின்றது. இது இறக்குமதி செய்யப்பட்ட ரயர்களின் விலைகளைவிட மூன்று மடங்கு அதிகமாயுள்ளது என்றும் அதனல் ரயர்களை குறைந்தவிலையில் பெறும் பொருட்டு இலங்கைப் போக்குவரத்துச்சபை இலங்கை ரயர் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவிருப்பதாகவும் இ. போ. ச. தலைவர் திரு அனில்முனசிங்கா தெரிவித்துள்ளார்.

### விசாரணைக் கமிட்டி நியமனம்

டாக்டர் டபிள்யூ இராசபுத்திரம் தலைமையில் பேராதனைப் பல்கலைக்கழக பொது நிர்வாகத்திலும், நிதி நிர்வாகத்திலும் ஏற்படும் ஊழல்களை விசாரிக்க கமிட்டி ஒன்று கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளது.

### மாத்தறை அரசாங்க அதிபர்

இலங்கை நிர்வாக சேவை

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிசாரின் உதவியோடு கடற்படையினர் கொள்ளுபிட்டியில் ஒரு பிக்குவைக் சுட்டுக் கொன்றதினமான 1966 ஜனவரி 8-ம் திகதி இச்சம்பவம் நடந்தது.

பிரஸ்தாப அதிகாரிகள் கடமையில் இருக்கும் பொழுது குடிபோதையில் இருந்ததாகவும், துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின் இவர்கள் அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஸ்ரீமாவோவின் இல்லத்துக்குள் சென்றதாகவும் அப்பொழுது இதுபற்றிப் பிரதமராக இருந்த திரு டட்லி சேனநாயக்காவிற்கு முறையிட்டதாகவும் ஆனல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், கடற்படை அதிகாரிகளிடமிருந்து வந்த கடிதம் ஆட்சிமன்றத்தில் வாசிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைத் தளபதி திரு. டி. வி. ஹண்டர் இது பற்றி விசாரித்து வருகிறார்

## கந்தபுராண பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், புதன்

இணுவில் -கோண்டாவில் காரைக்கால் சிவன்கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு இம்மாதம் 11-ம் திகதி தொடக்கம் கந்தபுராணப் பிரசங்கங்கள் நடைபெற்று வருகின்றன.

5-ம் திருவிழாவாகிய இன்று ''வீரவாகு தேவர் தூது'' என்னும் பொருள் பற்றி பிரம்மஸ்ரீ வ. குகசர்மாவும், 16-ம் திகதி ''சூரன் போர்'' பற்றி வித்துவான் திரு. சி ஆறுமுகம், 17 ம் திகதி 'தக்கன் யாகம்' பற்றி திரு க. சிவராமலிங்கமும் 18-ம் திகதி 'வள்ளி திருமணம்' பற்றி திரு. க கணபதிப்பிள்ளையும் பிரசங்கம் செய்வார்கள்.

## வேலை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும்.

தற்போது வழங்கிவரும் ஆஸ்பத்திரி காவலாளிகள் என்ற பெயரைமாற்றி ஆஸ்பத்திரி 'கார்ட்டுக்கள்' என அமைக்கவும்.

காவலாளிகளின்உத்தியோக உடை பற்றியும் அவர்களது வேலைநேரம் பற்றியும் வேறு பல பிரச்னைகள் பற்றியும் இம்மகஜரில்குறிப்பிடப்பட்டிருப்பதுடன் அமைச்சரை நேரில் சந்தித்து இவை பற்றிப் பேசவும் அவகாசம் தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org